முல்லை முத்தையா
தொகுத்து வழங்கும்

# பார்புகழும் பாவேந்தர்

விற்பனை உரிமை :

நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

41, பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-600 098

பாவேந்தர் புகழ்
பரப்பும் இதர நூல்கள்

1. புரட்சிக் கவிஞர்
நான்காம் பதிப்

2. பாவேந்தர்
பாரதிதாசன்
பெருமை
இரண்டாம் பதிப்

3. பாவேந்தர்
பாரதிதாசன்
அறுசுவை விருந்து
இரண்டாம் பதிப்

# பார்புகழும் பாவேந்தர்

முல்லை முத்தையா

சங்கீதா
Props: VISHAL THEATRES (P) LIMITED
புத்தகம் வெளியிடுவோர் & விற்பனையாளர்,
132, ஜானி ஜான் கான் ரோடு
இராயப்பேட்டை, சென்னை - 600014

□ *முதல் பதிப்பு : மே, 1984*

□ *பாவேந்தரின் 94—வது பிறந்தநாள் வெளியீடு*

□ **விலை. ரூ. 8-25**

□ **அச்சு அமைப்பு : நா. செல்வராசன் D. P. Tech**
**மு. பழநியப்பன் B.A.,**

□ **மேலட்டை ஓவியம்: கோபன்**

□ *அச்சு வடிவம் : ஜீவன் அச்சகம்*
*சென்னை-600 005*

## உவமைக்கவிஞர் சுரதா அவர்களின் அணிந்துரை

முல்லை முத்தையா

இந்தப் பெயரை நினைக்கும் பொழுது பழைய நினைவுகள் என் பக்கத்தில் வருகின்றன.

அலைகள் சந்திக்கும் சென்னை பட்டினப்பாக்கத்தில், சிந்தனைச் சிற்பி சிங்கார வேலர் அவர்கள் இல்லத்தில் 1943இல் நான் அவரைச் சந்தித்தேன். பாவேந்தர் அவர்கள்தான் எனக்கு அவரை அறிமுகப்படுத்தி வைத்தார். அதன் பிறகு 41 ஆண்டுகள் நகர்ந்து விட்டன.

அன்று, பாவேந்தரின் பாடல்களைத் தமிழ் நாடெங்கும் பரப்புவதற்குத் தந்தை பெரியாரும், குத்தூசி குருசாமியும், மணவை திருமலைசாமியும் பெரு முயற்சி எடுத்துக் கொண்டனர்.

அப்போது. பாவேந்தரின் கவிதைகளை நூல் வடிவில் வெளியிடுவதற்காக முல்லைப் பதிப்பகத்தினைத் தொடங்கியவர்தான் என் இனிய நண்பர் முல்லை முத்தையா.

முல்லை பதிப்பகத்தின் முதல் வெளியீடாக 'அழகின் சிரிப்பு' வெளி வந்தது.

வடலூர் வள்ளலாருக்கு ஒரு தொழுவூர் வேலாயுத முதலியார் கிடைத்ததைப் போன்று பாவேந்தருக்கு ஒரு முல்லை முத்தையா கிடைத்தார்.

இன்று பாவேந்தர் அவர்களைப் பற்றி அறிஞர்கள், கவிஞர்கள், தலைவர்கள் கூறியுள்ள கருத்துக்களையும் பாவேந்தரைப் பற்றிய செய்திகளையும் தொகுத்து வழங்கியுள்ளார்.

நண்பர் முல்லை முத்தையா அவர்களின் "பார் புகழும் பாவேந்தர்" என்னும் இத் தொகுப்பு நூலினை நான் பலமுறை படித்துப் பார்த்தேன். தேர்ந்தெடுத்து வழங்கியுள்ள கருத்துரைகள், செய்திகள் சிறப்பாக உள்ளன. தன்னைப் பற்றியே சொல்லிக் கொள்வோரும், தன்னைப் பற்றிப் பலரைச் சொல்லச் சொல்லி மகிழ்வோரும் மிகுந்திருக்கும் இக்காலத்தில் மற்றவர்களைப் பற்றிக் கூறிய கருத்துரைகளைத் தொகுத்து வெளியிடுவதென்பது பெருந்தன்மையான செயலாகும்.

பாவேந்தர் பற்றி ஆய்வு செய்வோருக்கும், கவிஞர்கட்கும், பகுத்தறிவாளர்கட்கும் இத்தொகுப்பு நூல் மிகவும் பயன்படும்.

பயன்படக் கூடிய பணியைச் செய்துவரும் முல்லை முத்தையா அவர்களை வாழ்த்துகிறேன். பாராட்டுகிறேன்.

29-5-1984

அன்புடன்,

சுரதா

# அன்றும் இன்றும்

நாற்பது ஆண்டுகளுக்கு முன் திரும்பிப் பார்க்கின்றேன்.

அப்பொழுது தேசிக விநாயகம் பிள்ளை, நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை, பாரதிதாசன், ச.து.சு. யோகியார் ஆகிய நான்கு கவிஞர்களே இருந்தனர். அவர்களுள் பாரதிதாசனைத் தவிர, ஏனைய மூவரும் பழைய தடத்திலே பாட்டு எழுதினார்கள்.

பாரதிதாசன் மட்டும் எதிர் அணியில் நின்று, மூடப்பழக்கத்தைச் சாடினார். காதலைக் கனிவோடு, சுவையோடு பழகு தமிழில் பாடி மகிழ்வித்தார்.

பழமை விரும்பிகள் அவரை ஏசினர்; எதிர்த்தனர்; வெறுப்போடு பார்த்தனர். அப்பொழுது நான் இருபத்து நான்கு வயதுடைய இளைஞன். என் மனம் வெதும்பியது. ஆயினும், நான் தளரவில்லை. துணிந்து பாரதிதாசன் நூல்களை வெளியிட்டு வந்தேன்.

காலம் மாறியது; எதிர்த்தவர்கள் சிலர் மனம் மாறினர்; சிலர் மாய்ந்துவிட்டனர். பாரதிதாசன் பரம்பரை என ஒரு படையே திரண்டு விட்டது. பாவேந்தர் பாடல்களைச் சுவைத்து சுவைத்து உள்ளம் பூரிக்கின்றனர். ஊர் தோறும் பாவேந்தர் விழா. கல்லூரிகளில் எல்லாம் விழா. அரசு ஆண்டு தோறும் விழாக் கொண்டாடுகிறது. பாவேந்தர் சிலையைக் காண்கின்றோம்..

பாரதிதாசன் பெயரில் பல்கலைக் கழகம் கண்டோம். இவ்வளவையும் பார்த்து இப்பொழுது மட்டற்ற மகிழ்ச்சியில் திளைக்கின்றோம்.

இத் தொகுப்பு நான்காவது ஆகும். முன் தொகுப்பு நூல்களில் காணாத பல அரிய கருத்துக்களை இதில் கண்டு களிக்கலாம்.

உற்சாகமான தீரர் அப்துல் ரகுமான் அவர்கள் இந்நூலை வெளியிடத் தூண்டி ஊக்கம் அளித்தார்கள்.

தமிழ்ப்பற்றும் குறிப்பாக, பாவேந்தரிடம் அபிமானமும் மிகுந்த வள்ளல் ஹாஜி சங்கு அப்துல் காதர் அவர்களின் ஊக்கமும், அன்புருவான மாபெரும் மனிதர் பெருங்கவிக்கோ வா. மு. சே. அவர்களின் ஒத்துழைப்பும் எனக்கு உறுதுணையாய் அமைந்தது.

பாவேந்தரின் வழித்தோன்றல் உவமைக் கவிஞர் சுரதா அவர்கள் சிறப்புரை வழங்கி அணி செய்திருக்கிறார்.

இந்நூலைத் தொகுத்து உருவாக்குவதிலும், சேகரிப்பதிலும், பிழை திருத்துவதிலும் உதவி புரிந்தவன் என் மகன் செல்வன் பழநியப்பன் B. A.

நுண்ணறிவுடைய திரு நா. செல்வராசன், D.P. Tech இதை ஆர்வத்தோடு வெளியிடுகிறார்.

அனைவருக்கும் உள்ளம் நிறைந்த நன்றி.

சென்னை-600 001
29-5-84

—முல்லை முத்தையா

## முதல் முழக்கம்

பாவேந்தர் வாழ்ந்த காலம் பொற்காலம். அவர்களோடு அணுகிப் பழகியவர்களைக் காண்பதும், அவர்கள் கூறுவதைக் கேட்பதும், அவர்களுடைய சொல்லோவியங் களைப் படிப்பதும் பெருமை தருவன.

பாவேந்தர் நூல்களை முதன்முதலில் அழகாகப் பதிப்பித்து வெளியிட்டுப் பெருமை பெற்றவர் முல்லை முத்தையா அவர்கள். தமிழக அரசின் பரிசும், விருதும், பட்டாடை யும், ஏனையோர் பாராட்டையும் பெற்றவர். இந்நூலில் பல அரிய செய்திகளை, கட்டுரை களைத் தொகுத்து வழங்கியுள்ளார் முல்லை முத்தையா அவர்கள்.

என் தந்தையார் கவிஞர் நாரா நாச்சியப்பன் அவர்கள் பாரதிதாசன் பரம் பரையின் முதல் அணியில் இருப்பவர்; அவரோடு நெருங்கிப் பழகியவர். எனவே, என் முதல் வெளியீடாக இந்நூல் வெளிவரு வதில் எனக்குப் பெருமை !

**நா. செல்வராசன்**

**—சங்கீதா**

# உள்ளுறை

1. பெரியார் ஈ. வே. ரா. 1
2. அறிஞர் அண்ணா 5
3. கலைஞர் பேருரை 8
4. தளபதி கி. வீரமணி 21
5. பாவேந்தர் முழக்கம் 24
6. இராம. அண்ணாமலை 27
7. தமிழக அரசு நடத்திய முப்பெரும் விழா 43
8. விழாவில் கிடைத்த முத்துக்கள் 51
9. பாவேந்தரின் புத்தாண்டு வாழ்த்து 59
10. பேராசிரியர் ந. இராமநாதன் 61
11. டாக்டர் இரா. இளவரசு 65
12. புரட்சிக்கவிஞர் விழா-நிகழ்ச்சி 68
13. அழகின் சிரிப்பு-புதுமைப்பித்தன் 69
14. புரட்சிக்கவிஞர்—கழகப் பதிப்புரை 72
15. பாவேந்தர் கடிதம் 73
16. இரா. பாவாணன் 75
17. வலம்புரி ஜான் 77
18. சிலம்பொலி செல்லப்பன் 79
19. இரா. முத்துக்குமாரசாமி 85
20. திரீயெம் அப்துல் ரகுமான் 89
21. கவிஞர் நாரா நாச்சியப்பன் 93




புரட்சித்தலைவர் முதல்வர் எம். ஜி. ஆர்
முல்லை முத்தையாவை கௌரவிக்கிறார்.
(1984)



பாவேந்தரும் முல்லை முத்தையாவும்
(1946)



டாக்டர் கலைஞர், முல்லை முத்தையாவுக்கு
சால்வை அணிவிக்கிறார்.
(1982)



பாவேந்தர் நூல்களை முதன் முதலில் வெளியிட்ட முல்லை
முத்தையாவுக்கு கல்வி அமைச்சர் அரங்கநாயகம்
பொன்னாடை அணிவித்துப் பரிசும் விருதும் வழங்குகிறார்.
(1979)

# 1

# துணிவுள்ள பெருங் கவிஞர்

**பெரியார் ஈ. வே. ரா.**

- பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் சமுதாய சீர்திருத்தவாதி. சாஸ்திரம், மதம், மூடநம்பிக்கைகள் ஆகியவற்றைத் தகர்த்து வீழ்த்துவதற்கு அயராது பாடுபட்டவர்கள்.

- தங்களுடைய அடிப்படைக் கொள்கைக்கு ஏற்ப, வள்ளுவரையும், பாரதியாரையும் பாரதிதாசனோடு ஒப்பிட்டுப் பேசுவது அவர்களுடைய இயல்பாகும்.

- சிவகெங்கை மன்னர் ராஜா துரை சிங்கம் கல்லூரியில் 8. 3. 1973ல் பெரியார் அவர்கள் நிகழ்த்திய உரை. 'விடுதலை' இதழில் வெளிவந்தது.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களைப் பற்றி தெளிவாகப் பேச வேண்டுமானால் பகுத்தறிவுக் கூட்டத்தில்தான் பேச முடியும். அப்படிக்கில்லாது கடவுள், மதம், மூடநம்பிக்கைக்கு ஆட்பட்ட இடங்களில் பேசுவது என்றால் வழ வழா கொழ கொழா அன்றுதான் பேச வேண்டி வரும்.

பாரதிதாசன் அவர்கள் புரட்சிகரமான கருத்துக்களை வெளிப்படுத்திய முதல் கவிஞரும் கடைசிக் கவிஞரும் ஆவார். அவருக்கு ஈடாக வேறு எந்தக் கவிஞரும் தோன்றவே இல்லை. தோன்றியவர்களும், தோன்றுகிறவர்களும் பழமைக் கருத்துக்களைக் கொண்டவர்கள் தான் ஆகும்.

இன்றைக்கு நம் நாட்டில் இவரோடு குறிப்பிடத்தக்க வேறு புலவர்கள் இருந்தார்கள் என்றோ, இருக்கிறார்களோ என்றோ சொல்லுவதற்கு இல்லை.

நமது தமிழ்ப் புலவர்கள் வள்ளுவரைக் கூறுவார்கள்; அடுத்து சாதிச் செல்வாக்கும் அரசியல் செல்வாக்கும் கொண்ட பாரதியாரைக் கூறுவார்கள். இவர்கள் எல்லாம் பழமைக் கருத்துக்களைக் கொண்டவர்கள், பெரிதும் மக்கள் இன்று ஒத்துக் கொள்ளத்தக்கவோ, பின்பற்றத் தக்கவோ கூடிய கருத்துக்களைக் கூறவில்லை. பாரதிதாசன் அப்படி அல்லவே; அவர் புதுமைக் கருத்துக்களையும் புரட்சிக் கருத்துக்களையும் மக்கள் சமுதாயத்திற்குத் தேவையான சமதர்மக் கருத்துக்களையும் துணிந்து வெளியிட்டுள்ளார். அவருக்கு அனுசரணையாக சுயமரியாதை இயக்கமும் திராவிடர் இயக்கமும் இருந்தன. சுருங்கச் சொன்னால், அவர்போல் தீவிரமான கருத்துக்களை அவருக்கு முன்பும் பின்பும் எடுத்துச் சொன்னவர்கள் இன்னார் என்று எடுத்துக் காட்ட ஆளே இல்லையே! அவர் கடவுள், மதம், சாஸ்திரம், பெண்ணடிமை, மூடநம்பிக்கைகள் இவைகளைக் கண்டித்து நன்றாகப் பாடியுள்ளார்.

பாரதியாருக்கோ, வள்ளுவருக்கோ கொடுக்கின்ற மரியாதை நமது பாரதிதாசனுக்கு நம் மக்கள் கொடுக்கத் தவறி விட்டார்கள், காரணம், பாரதிதாசன் புதுமைக் கவிஞர்; புரட்சிக்கவிஞர்; புரட்சிகரமான கருத்துக்களைக் கொண்டவர் என்பதால் தான்.

மற்ற கவிஞர்கள் பழமை விரும்பிகள். ஆனதினால்; பழமையில் பற்றுக் கொண்ட மக்கள் அவர்களுக்கு ஆதரவு கொடுக்கிறார்கள்; போற்றுகிறார்கள். நமது முட்டாள் தனத்துக்கு உதாரணமே வள்ளுவரைப் பாராட்டுவது ஒன்றே போதுமே!

வள்ளுவர். 'எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு' என்றும் 'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய் பொருள் காண்பது அறிவு; என்றும் பாடியுள்ளார். எனவே அவர் பகுத்தறிவு வாதி; யார் எதைச் சொன்னாலும் அறிவு கொண்டு ஆராய்ந்து உணர வேண்டும் என்று சொல்லி இருக்கின்றார் என்று கூறுவார்கள்,

தோழர்களே! வள்ளுவர் இப்படிக் கூறி இருந்தாலும் அது அவர் கொள்கை அல்ல! ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் சொன்னார். அவ்வளவு தான். மற்றபடி அந்தப் பழமை விரும்பியே, உலகத்தார் உண்டென் பவை இல்லென்பான் வையத்து அலகையா வைக்கப்படும்' என்று கூறியுள்ளாரே! எனவே மூட நம்பிக்கை முதலியவைகளில் நம்பிக்கை உடையவரே வள்ளுவர்.

பாரதியாரை எடுத்துக் கொண்டாலோ, அவர் தாவாத கொள்கை இல்லை. கடவுள், மதம், சாஸ்திரம், முன்னோர் நட்பு முதலிய எல்லாவற்றையும் கூறியுள்ளார். எனவே தான் பழமை விரும்பிகள் இவர்களை எல்லாம் போற்றுகிறார்கள்.

பாரதிதாசன் எந்த இடத்திலும், எந்தச் சந்தர்ப்பத் திலும் பகுத்தறிவுக்குப் புறம்பான கருத்துக்களைப் பாட

முற்படவே இல்லை. சமுதாய மாற்றத்திற்கான கருத்துக்களை துணிந்து கூறிய பெரும்புலவர் ஆவார். இன்றைக்குப் பகுத்தறிவாளர்களுக்கு எடுத்துச் சொல்லத் தக்க சாதனமாகப் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பாடல்கள் அமைந்துள்ளன.

நமது மக்கள் இப்படிப்பட்டவருக்குப் பாராட்டும், பெருமையும் அளிக்க வேண்டிய அளவுக்கு அளிக்காதது வருந்தத் தக்கதாகும். காரணம், அவர் பகுத்தறிவு வாதி ஆனபடியால் அவருடைய பணிக்குக் கிடைக்கு வேண்டிய மதிப்புக் கிடைக்கவில்லை.

பாரதிதாசனைப் போன்று புதிய கருத்துக்களை எடுத்துச் சொல்லிப் பரப்ப ஆளே இல்லையே! பாரதிதாசன் போல நமது நாட்டில் புரட்சிப் பாவலர்கள்தோன்றி இருந்திருப்பார்களே யானால் நமக்கு 2000, 3000 ஆண்டுகளாக இருந்து வரும் இழிதன்மை இருந்து வந்திருக்குமா?

## 2

# நாம் பெற்ற கருவூலம்

**அறிஞர் அண்ணா**

- ☐ *புரட்சிக் கவிஞரின் 55-ம் ஆண்டு நிறைவு விழா, 1946-ம் ஆண்டு சென்னையில் நாவலர் சோம சுந்தரபாரதியார் அவர்கள் தலைமையில் சிறப் பாகக் கொண்டாடப் பெற்றது.*

- ☐ *விழாவில் அறிஞர் பெருமக்கள் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள்,*

- ☐ *கவிஞருக்குப் பொன்னுடை அணிவித்து, பொற் கிழிவழங்கப்பெற்றது.*

- ☐ *அப்பொழுது அறிஞர் அண்ணு அவர்கள் நிகழ்த் திய சொற்பொழிவின் சுருக்கம் இங்கே வெளி யிடப் பெறுகிறது.*

வானுலக வீதியிலே சுற்றி, தேவர் தம் வடிவழகைக் கண்டு கூறி வருபவரே கவிஞர். அஃதே கலை என்றிருந்த நிலை மாறி, கவி நம்முடனேயே இருப்பார். நமது உலகில்தான் உலவுவார். நாம் காண்பனவற்றையே காண்பார். ஆனால் அவைகளைப் பற்றி நாம் கூறத் தயங்குவோம். இயலாததால் அவர் கூறுவார். அறிவுத் தெளிவால், கலைத்திறனால் இந்தப் புரட்சியைச் செய்தார் பாரதிதாசன்.

புரட்சித்துறையில் ஈடுபட்டவர்கள் பெரிதும் துவக்கத்தில் பூவால் அர்ச்சிக்கப்படுவதில்லை. புன் மொழிகளையே வீசப் பெறுவார். அதிலும் மொழி வீசும் துறையிலே ஈடுபட்ட புலவர்கள் உலகிலே புத்தம் புதிய புரட்சியை ஒருவர் வெற்றிகரமாகச் செய்து வருவது கண்டால், பொச்சரிப்பின் விளைவாகப் பொன்மொழி, மாரி போல் பொழியத்தானே செய்யும்?

பாரதிதாசன் இந்த மாரியைச் சட்டை செய்யவில்லை. புரட்சியில் ஈடுபட்டுள்ளவருக்கு இதற்கு நேரம் ஏது? போரிட்டார், போரிட்டார், போரிட்டுக் கொண்டே இருக்கிறார்! வென்றார், வெல்கிறார், வெற்றி பெற்றபடியே இருப்பார்!

அவர் பெற்ற வெற்றிகளிலே ஒன்று அவருடைய கவிதைகளை இன்று மக்கள் அறிந்து கொண்டார்கள். புரிந்து கொண்டார்கள். ரசிக்கிறார்கள். பயன் பெறுகிறார்கள்:

நாளைக்கு என்ன நடக்கும் என்பதை எண்ணும்போது தான் "புரட்சிக் கவிஞரே பாரதிதாசன்; ஐயமில்லை" என்று அனைவரும் கூறமுடிகிறது. அவர் போர் முகாம் அமைத்து விட்டார். போர் வீரர்களைக் கூட்டி விட்டார், படைக்கலங்களும் தயார். முரசும் கொட்டி விட்டுக் கூப்பிடுகிறார்.

**"கொலை வாளினை எடடா மிகு**
**கொடியோர் செயல் அறவே"**

என்று. அந்தக் குரல், காற்றில் மிதந்து வரும் கீதமாக மட்டும் இன்றி கிண்கிணிச் சத்தத்தோடு இழைந்து வரும் கீத மொழியாக மட்டுமின்றி, கேட்போரின் வளைந்த முதுகை நிமிர்த்தி விடும் வீரக் குரலாகி விட்டது! எனவே தான் நமக்கொரு வால்டேர் கிடைத்துவிட்டார். நமக்கோர் ஷெல்லி கிடைத்து விட்டார். நமக்கு ஒரு கவிஞர் கிடைத்து விட்டார். அவர் நம்மோடு இருக்கிறார். நமக்காக இருக்கிறார். நம் வேலையைச் செய்கிறார். நாம் வாழ வழி அமைக்கிறார். அவர் வாழ்க, அவர் திறன் ஓங்குக! அவர் வெல்க! அவர் வெற்றியினால் நமக்கு வெற்றி ஓங்குக! என்று மனமார நாம் கூறுகிறோம். நாம் மட்டுமா, நாடும் கூறுகிறது.

நாட்டு மக்களுடைய இந்த மகிழ்ச்சியின் ஒரு சிறு அறிகுறியே இதுபோது கவிஞருக்கு அளிக்கப்படும் பொற்கிழி. இதிலே குவிந்துள்ள ஒவ்வொரு காசும் பேசக் கூடுமானால் மணிக்கணக்கில் பேசும் கவிஞரின் பெருமையை, அதனால் சமுதாயம் பெற்ற பெருமையை பொற்காசுகள் பேசினாலும்கூட புரட்சிக் கவிஞரின் செவியில் அந்த ஒலி புகாது—எப்படிப் புகும்? அவருடைய செவியிலே ஆலைச் சங்கு, சுண்ணம் இடிக்கும் சுந்தரியின் பெருமூச்சு, பாட்டாளியின் குமுறல், பணமெனும் கொடி கட்டிய படகு வருமா என்று எதிர்பார்த்து ஏங்கும் ஏழையின் ஏக்க மொழி, எழில் ததும்ப இளமை ததும்ப உள்ள மங்கை மஞ்சத்தில் குறட்டை விடும் இளம் மணாளனைக் கண்டு கண்ணீர் விட்டுக் கதறும் ஒலி இவை புகுந்து, கண்களிலே அனலையும் புனலையும் கிளப்பிவிட, “ஏடா தம்பி! எடுடா பேனா! கொண்டு வா மைக்கூடு, இந்தக் கொடுமைகளைக் களைந்தேயாக வேண்டும்; இன்றே களைந்தாக வேண்டும்.” என்று முழக்கமிடுகிறார். அந்த முழக்கம் இந்நாளில் நாம் பெற்ற கருவூலம்! அவர் நமக்கு அளியாத செல்வம்; அவர் வாழ்க! வெல்க’

# 3

# தமிழ் இனத்தைத் தட்டி எழுப்பியவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

**—கலைஞர் பேருரை**

- திராவிடர் கழக இலக்கிய அணி சார்பாக 1982-ல் பெரியார் திடலில் பாவேந்தர் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.
- கலைஞர் கருணாநிதி அவர்கள் இலக்கியச் செறிவு நிறைந்த பேருரை நிகழ்த்தினார்கள்.
- சிறப்புமிக்க பேருரை 'முரசொலி,' 'விடுதலை' இதழ்களில் வெளிவந்தது.
- கலைஞர் அவர்களின் அனுமதியுடன் இங்கே வெளியிடப் பெறுகிறது.

## அண்ணா நடத்திய திராவிடர் இசை விழா!

புரட்சிக் கவிஞர் அவர்களுடைய விழாவிலே ஒரு பெரும் சிறப்பாக பேராசிரியர் இராமனுதன் அவர்களுக்கும், நாமக்கல் செல்லப்பனுர் அவர்களுக்கும், முல்லை முத்தையா அவர்களுக்கும் சிறப்பும்—பாராட்டும் இங்கே செய்யப்பட்டு இருக்கின்றது.

நான் இந்த நிகழ்ச்சிக்கு வரும்பொழுது முல்லை முத்தையா அவர்கள் இப்பொழுது எப்படி இருப்பார் என்கின்ற அவாவுடன் வந்தேன். காரணம், 38 ஆண்டுகளுக்கு முன்பு காஞ்சிபுரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் "திராவிடர் இசை விழா" என்ற ஒரு விழாவை நடத்தியபொழுது டி. என். இராஜரத்தினம் அவர்களுடைய நாயன் இசை நிகழ்ச்சி நடைபெற்ற பொழுது அந்த இசை விழாப் பந்தலின் ஒரு மூலையில் ஒரு துண்டை விரித்துப் போட்டு, அதிலே அண்ணா அவர்களும், நானும், முல்லைமுத்தையா அவர்களும் அமர்ந்து அந்த இசை நிகழ்ச்சியைக் கேட்டோம்.

அப்பொழுது முல்லை முத்தையா அவர்கள் பார்ப்பதற்கு மிக வசீகரமானத் தோற்றத்தோடு-காண்போரைக் கவர்கின்ற தோற்றத்தோடு வாலிப மிடுக்கோடு அன்றைக்குத் திகழ்ந்தவர். அவரை நீண்ட நாட்களுக்குப் பிறகு பார்க்கப் போகிறோம் என்கின்ற ஆவலோடு இங்கே வந்தேன். அவருடைய தோற்றம் 38 ஆண்டு இடைவெளியை எனக்கு நினை வூட்டியது!

எனினும் அவர் பேரறிஞர் அண்ணா அவர்களிடத்திலும், பெரியார் அவர்களிடத்திலும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களிடத்திலும் கொண்டிருந்த அன்பும், இன்னமும் கொண்டிருக்கின்ற கொள்கைப் பிடிப்பும் என்னை வியப்பிலே ஆழ்த்திக் கொண்டேயிருக்கின்றது? அப்படிப்பட்ட நண்பரை நீண்ட நாட்களுக்குப் பிறகு சந்தித்ததில் நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

அதைப் போலவே நாமக்கல் செல்லப்பனார் அவர்கள் நான் சேலத்தில் ஒரு திரைப்பட நிறுவனத்திலே பணியாற்றியபோது, சேலத்திற்கு அருகாமையிலே ஒரு சிற்றூரிலே நடை பெற்ற திருமண விழாவிற்கு இலக்குவனாரும் நானும் சென்று இருந்தோம். அப்பொழுது இலக்குவனார் அவர்கள் நாமக்கல் செல்லப்பனார் அவர்களிடத்திலே என்னை அறிமுகப்படுத்தி இவர் என்னுடைய மாணவர் என்று குறிப்பிட்டார். அதற்குப் பிறகு நாமக்கல் செல்லப்பனார் அவர்களை இங்கே சந்திக்கின்ற வாய்ப்பு நம்முடைய திராவிடர் கழகத்தினுடைய நண்பர்களால்—குறிப்பாக வீரமணி அவர்களால் எனக்குக் கிடைத்திருக்கின்றது.

பேராசிரியர் இராமனுதன் அவர்களை நான் அடிக்கடி சந்திக்கின்ற வாய்ப்பினைப் பெற்றிருக்கின்றேன். புரட்சிக் கவிஞர் பாரதி தாசன் அவர்களுடைய கவிதைகளைத் திறனாய்வு செய்தும், அவருடைய கருத்துக்களைப் பரப்புகின்ற பணியிலே ஈடுபட்டும், தந்தை பெரியார் அவர்களுடைய லட்சியங்களை, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கொள்கை-கோட்பாடுகளை நாட்டிற்கு எடுத்துச் சொல்லுகின்ற நற்தொண்டினை ஆற்றியும் வருகின்ற பேராசிரியர் இராமனுதன் அவர்களும் இந்தப் பாராட்டினைப் பெற்று இருக்கின்றார்கள்.

அவர்களுக்கு எல்லாம் சிறப்பும் பாராட்டும் இங்கே வழங்கப்படுகின்றது என்று எண்ணிய போது வெள்ளியாலோ அல்லது தங்கத்தாலோ பரிசுகள் வழங்கப்படுமோ என்கின்ற எண்ணத்தோடுகூட நான் இங்கு வந்தேன். பிறகுதான் இது பெரியார் திடல் என்பதையும், அப்படிப்பட்ட ஆடம்பரமான பரிசுகளோ வெகுமதிகளோ இவர்களுக்கு வழங்கப்பட்டால் பெரியார் அவர்களுடைய சிக்கனக் கொள்கைக்கு—ஆடம்பரமற்ற கொள்கைக்கு மாறுபாடானது என்பதை, அந்த விஷயத்திலும் கடைப்பிடித்துக் கொண்டிருக்கின்ற என்னுடைய நண்பர் வீரமணி அவர்கள் மிகச் சிறப்பாகக் கடைப்பிடித்து அவர்களுக்குச் சில சால்வைகளை போர்த்தச் சொன்னார்.

## புரட்சிக் கவிஞர் விழாப் பயன :

சால்வைகளைப் போர்த்துவது என்பது சாதாரணமானது அல்ல. கடையெழு வள்ளல்களிலே ஒரு வள்ளலான பேகன், போர்வையை போர்த்திய காரணத்தினாலேயே வள்ளல் என்கின்ற பெயரெடுத்தவன். எனவே அவர்களுக்கு இங்கே அளிக்கப்பட்ட போர்வை இப்பொழுது இந்தக் கோடை காலத்தில் இங்கே பயன்படாவிட்டாலும் எதிர் காலத்திலே நிச்சயமாகப் பயன்படும் என்ற நம்பிக்கை எனக்கும் உண்டு. அவர்களுக்கும் உண்டு.

இன்று நாம் இங்கே புரட்சிக் கவிஞருடைய விழாவை நடத்துவது கடந்த காலத்தை எண்ணிப் பார்ப்பதற்கும், நிகழ்காலத்தைப் பற்றிக் கவலைப்படுவதற்கும், எதிர் காலத்தைப் பற்றி எவ்வாறு செயல்பட வேண்டும் என்று திட்டம் தீட்டுவதற்கும் என்பதை மறந்து விடக் கூடாது.

என்னுடைய நண்பர் அன்பில் அவர்கள், பேசிப் பயன் என்ன? செயலிலே இறங்க வேண்டும் என்று சொன்னார். அவர் பேசுவதற்குத் தயார் செய்து கொண்டு வராத காரணத்தாலோ அல்லது திடீர் என்று பேச அழைத்துவிட்ட திகைப்பிலே மூழ்கிவிட்ட காரணத்தாலோ அதைச் சொன்னாரே தவிர பேசிப் பயன் என்ன? என்று அவர் கேட்ட கேள்வி ஒரு ஆதங்கத்தால் —ஒரு விரக்தியால் — இவ்வளவு காலமும் பேசிப் பேசி என்ன கண்டோம் இந்த நாட்டில் என்கின்ற வேதனையால் வெளிப்பட்ட கருத்தே தவிர வேறல்ல.

## எழுத்தால் - பேச்சால் மக்களை ஓரளவு திருத்தியிருக்கிறோம் !

நாம் பேசித்தான் — கருத்துக்களை எழுத்து வடிவமாக ஆக்கித்தான், கவிதை வடிவமாக ஆக்கித்தான் உரைநடை வடிவமாக ஆக்கித்தான் இந்த நாட்டு மக்களை இந்த அளவிற்காவது தயாரித்து இருக்கிறோம் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது!

எனவே அப்படிப்பட்ட கருத்தாழமிக்க பேச்சும், கவிதைகளும் தமிழ் இனத்தைத் தட்டி எழுப்பியிருக்கிறது என்பது வரலாற்று உண்மை.

அப்படிப்பட்ட வரலாற்று உண்மையை உருவாக்கிக் காட்டிய, பெருமைக்குரியவர்களில் ஒருவர்தான் மறைந்தும் மறையாமல் நம்முடைய மனதில் நிறைந்திருக்கின்ற புரட்சிக் கவிஞர்—பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள்.

அவர்களுடைய இந்த எழுச்சிமிக்க விழாவில் நம்முடைய கவிஞர் பெருமக்களெல்லாம் மூன்று தலைப்புக்களில் 'தந்தை பெரியார் தமிழருக்கு' என்று தொடங்கி 'உயிர் போன்றார்' 'தாய் போன்றார்' பயிர் போன்றார்' என்ற தலைப்புக்களில் மிகச் சிறப்பான கவிதைகளை இங்கே யாத்துத் தந்தார்கள்.

எனினும் நண்பர் குடியரசு போன்ற கவிஞர்களுக்கு நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன், நம்முடைய எண்ணங்களை மக்களுடைய உள்ளத்திலே பதிய வைக்க நாம் முற்படுகிற நேரத்தில் அது அனைவரையும் பண் படுத்தக் கூடிய வகையிலே அது அமைந்திட வேண்டுமே யல்லாமல் யாரையும் புண்படுத்தக் கூடிய வகையிலே அமைந்திடக் கூடாது என்பதை மாத்திரம் நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

## கடுமை இருக்கலாம் கண்ணியக் குறைவு கூடாது!

நம்முடைய எழுத்தில்—கவிதையில் கடுமை இருக் கலாம்—காரசாரம் இருக்கலாம், ஆனால் பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் எடுத்துக் காட்டியதைப் போல் கடுகளவு கண்ணியக் குறைவும் இருக்கக் கூடாது என்பதை நான் உரிமையோடு எடுத்துக் காட்டக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எவ்வளவோ கடுமை யான ,வார்த்தைகளை எல்லாம் தன்னுடைய கவிதைகளிலே இணைத்துப் பாடியிருக்கின்றார். நான் அடிக்கடி சொல்வ

துண்டு, மாணவ பருவத்திலே, திருவாரூரிலே 'தமிழ் நாடு தமிழ் மாணவர் மன்றம், என்ற ஒன்றினை நான் தொடங்கிய போது அதற்கு வாழ்த்து அனுப்புங்கள் என்று நான் புதுவையிலே இருந்த புரட்சிக் கவிஞருக்கு மடல் தீட்டிய போது, அவர் தயங்காமல் வாழ்த்துக் கவிதையொன்றை அனுப்பி வைத்தார்கள். அந்த வாழ்த்துக் கவிதையிலே தான்

**"தண்பொழிலில் குயில்பாடும் திருவாரூரில்**
**தமிழ்நாடு தமிழ்மாணவர் மன்றம் காண்**
**வன்மையொடும் உண்மையொடும் வாழ்ந்திடுங்காண்!"**

என்று அந்தக் கவிதையைத் தொடங்கி—

**கிளம்பிற்றுகாண் தமிழ்ச் சிங்கக் கூட்டம்**
**கிழித்தெறியத் தேடுதுகாண் பகைக் கூட்டத்தை**
**வளம்பெரிய தமிழ்நாட்டில் தமிழரல்லார்**
**வால் நீட்டினால் உதைதான் கிடைத்திடுங்காண்"**

என்று எழுதினார் !

புரட்சிக் கவிஞரே 'உதைதான் கிடைத்திடுங்காண்' என்று எழுதிய பிறகு நாம் ஏன் இன்னொரு எட்டடி பாயக் கூடாது என்று எண்ணிட குடியரசு போன்ற கவிஞர்களுக்குத் தோன்றும்.

புரட்சிக் கவிஞர் பூகம்பமாக இருந்தால் குடியரசு போன்றவர்கள் எரிமலையாக ஆவதிலே எனக்கு மறுப்பு இல்லை. ஆனால், அதே நேரத்திலே 'ஆவேசத்திற்கும்' 'ஆபாசத்திற்கும்' இடையிலே உள்ள முரண்பாட்டை தயவு செய்து நம்முடைய கவிஞர் பெருமக்கள்—எழுத்தாளர்கள். பேச்சாளர்கள் உணர்ந்துகொள்ள வேண்டுமென்று புரட்சிக் கவிஞருடைய இந்த விழாவில் நான் மிகுந்த பணிவன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

புரட்சிக் கவிஞர் அவர்கள் தந்தை பெரியார் அவர்களுடைய கொள்கைகளை பேரறிஞர் அண்ணா அவர்களுடைய எண்ணங்களை கவிதை வடிவிலே நாட்டிற்குத் தந்தவர்கள்

இன்றைக்கு இந்திய துணைக் கண்டத்தில் மாநில அரசுகளானாலும்—மத்திய அரசானாலும் குடும்ப நலத்திட்டம் பற்றி வாரங்கள்—மாதங்கள் என்றெல்லாம் கொண்டாடுகின்ற காட்சியினையும் ஊரிலே இருக்கின்ற சுவர்களிலே எல்லாம் குடும்ப நலத்திட்டம் பற்றி விளம்பரங்கள் செய்கின்ற காட்சிகளையும் காணுகிறோம்.

## புரட்சிக்கவிஞர் வலியுறுத்திய குடும்பநலத் திட்டம்!

ஆனால், இதை ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் கவிதை வரியிலே இதுதான் சுயமரியாதை இயக்கத்தினுடைய கருத்து என்று எடுத்துச் சொன்னார்.

**"காதலுக்கு வழிவைத்து கருப்பாதை சாத்த**
**கதவொன்று கண்டறிவோம் இதில் என்ன**
**குற்றம்?"**

என்று கேட்டார்.

திராவிடர் இயக்கத்தினுடைய, குறிப்பாக சுயமரியாதை இயக்கத்தினுடைய கொள்கைகளிலே ஒன்றாக இந்தக் குடும்ப நலத்திட்டம் நாற்பதாண்டு காலத்திற்கு முன்பே விளக்கப்பட்டு இருக்கின்றது—பிரச்சாரம் செய்யப்பட்டு இருக்கின்றது என்பதை எண்ணுகிற நேரத்தில் அதை மிக அழகான கவிதைகளின் மூலமாகப் புரட்சிக் கவிஞர் நாட்டுக்குத் தந்திருக்கின்றார் என்பதையும் மறந்திட இயலாது.

அவர் ஒவ்வொரு துறை பற்றியும் எவ்வளவு அழகாக எழுதினார். எவ்வளவு எழுச்சியோடு எழுதினார் என்பதையெல்லாம் திராவிடர் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் வீரமணி அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள்.

## பராசக்தி படமும் புரட்சிக்கவிஞர் பாடலும்!

அவருக்குச் சில நேரங்களில் ஆத்திரம் வெகுவாக வருவதுண்டு. நான் அவரோடு பல நேரங்களிலே நெருங்கிப் பழகுகின்ற வாய்ப்பினை பெற்ற காரணத்தினால் அத்தகைய நிகழ்ச்சிகள் சிலவற்றை உங்களுக்குச் சொன்னால் அது புதுமையாக இருக்கும்.

அவருடைய கவிதைகளை—அவருடைய எழுத்துக்களைத் திரும்பத் திரும்ப உங்களிடத்திலே எடுத்துச் சொல்வதை விட அத்தகைய நிகழ்ச்சிகளைச் சொல்லுவதிலே ஒரு புதுமை இருக்கும் என்பதால் சொல்ல விரும்புகிறேன்.

ஒருமுறை புரட்சிக் கவிஞர் சென்னையிலே உள்ள ஏ.வி.எம். திரைபட நிறுவனத்திற்கு வருகை தந்தார்.

எதற்காக வந்தார் என்றால் 'பராசக்தி' படம் அப்பொழுது தயாராகிக் கொண்டிருந்தது. 'பராசக்தி' படத்தில் ‘‘வாழ்க வாழ்கவே' வளமார் நமது திராவிட நாடு'' என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எழுதிய பாடலை முதல் பாடலாக ஒரு நடனத்திற்கு அமைக்கலாம் என்று ஒரு கருத்து எடுத்துச் சொல்லப்பட்ட போது அந்தப் பாடலை இந்தப் படத்திற்கு உரிமையாக எழுதித் தருவாரா? என்ற கேள்வியும் எழுந்தது.

நான் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு புரட்சிக் கவிஞரைச் சந்திக்க புதுவைக்குச் சென்றேன்.

'எங்கே வந்தாய்?' என்று கேட்டார்.

'பராசக்தி' என்ற ஒரு படம் எடுக்கப்படுகின்றது. அந்தப் படத்திலே தாங்கள் எழுதிய ‘வாழ்க வாழ்கவே வளமார் நமது திராவிடநாடு'' என்ற பாடலை எப்படியாவது புகுத்தவேண்டும் என்று எண்ணுகிறோம்; அதற்கு நீங்கள் உரிமை வழங்க வேண்டும். அதனுடைய உரிமையாளர்கள் என்னை நம்பி உங்களிடத்திலே அனுப்பியிருக்கிறார்கள்; அந்த உரிமையைப் பெற்று வரமுடியுமென்று-என்று கூறினேன்.

புரட்சிக் கவிஞர் தன்னுடைய விழிகளை அகல விரித்து என்னைப் பார்த்தார். நான், அந்தப் 'பாடலுக்கு எவ்வளவு ரூபாய் வேண்டுமானாலும் நான் வாங்கித் தருகிறேன் பட உரிமையாளர்களிடத்தில்' என்று சொன்னேன்.

'உண்மையிலேயே அந்தப் பாட்டை அந்தப் படத்தில் வைக்கப் போகிறார்களா?' என்று கேட்டார்.

'நான்தான் உரையாடலை எழுதுகிறேன். வைக்கத்தான் கேட்கிறேன்' என்று சொன்னேன்.

'அப்படி வைப்பதாக இருந்தால் அவர்கள் ஒன்றும் எனக்குப் பணம் தர வேண்டாம். நான் தருகிறேனப்பா பணம்!' என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் அன்றைக்குச் சொன்னார்.

காரணம் திராவிடநாடு, அல்லது திராவிடர் இயக்கக் கொள்கை என்ற ஒரு சொல் நம்முடைய படங்களிலே அன்றைக்கு வருவதற்கு அவ்வளவு சிரமம் இருந்தது.

எனவேதான் புரட்சிக் கவிஞர் அவர்கள் 'அந்தப்பாடலை வைப்பதாக இருந்தால் நான் பணம் தருகிறேன்' என்று குறிப்பிட்டார்.

## ஏ. வி. எம். கலைக்கூடத்தில் ஒரு நாள்!

பிறகு அந்தப் பாடலுக்கான உரிமையை நான் பெற்றேன். அந்தப் பாடல் ஒலிப்பதிவு செய்யப்படுகிற நேரத்தில் அவர் சென்னைக்கு—ஏ. வி. எம். நிறுவனத்திற்கு அழைக்கப்பட்டு வந்தார்.

அவரும் நானும் காரில் ஏ. வி. எம். நிறுவனத்திற்குள் வந்து கொண்டிருக்கிறோம்.

அதற்கு முன்பு சேலம் மாடர்ன் தியேட்டருக்கு ஒரு படத்திற்கான பாடலை புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் எழுதிவிட்டு சென்னைக்கு வந்திருக்கிறார்.

இங்கே ஏ.வி. எம். நிறுவனத்திற்குள் நுழைகிற நேரத்தில் 'சிகப்பு விளக்கு'ப் போடப்பட்டு எங்களுடைய கார் நிறுத்தப்பட்டது.

'ஏன்?' என்று கேட்டோம்.

'இங்கே பாடல் ஒலிப்பதிவு நடந்து கொண்டிருக்கிறது. கார் ஒலி கேட்டால் அந்த ஒலி உள்ளே ஒலிப்பதிவை பாதித்து—இந்த ஒலியை அந்த ஒலிப்பதிவுக் கருவி ஈர்த்து விடும். ஆகவே காரை நிறுத்துங்கள்' என்று சொன்னார்கள்.

பாரதிதாசன் அவர்களுக்குக் கடுங்கோபம் வந்து விட்டது. 'அப்படி என்ன பெரிய ஒலிப்பதிவு கருவி இது?' என்று கோபித்தார்.

'ஏன் இப்படிக் கோபிக்கிறீர்கள்?' என்று நாங்கள் கேட்டபோது, ''சேலத்திலே நான் ஒரு பாட்டு எழுதிக் கொடுத்தேனப்பா, ''கமழ்ந்திடும் பூவிலெல்லாம்'' என்று அந்தப் பாட்டிலே எழுதினேன். அந்த ஒலிப்பதிவாளர் சொல்லிவிட்டார், ''கமழ்ந்திடும் பூவிலெல்லாம்'' என்ற அந்த வரியை மாற்றுங்கள் என்றார். ஏன் என்று கேட்டேன். ''கமழ்ந்திடும்'' என்பதை எங்களுடைய ஒலிப்பதிவு இயந்திரம் பதிவு செய்யாது என்றார். பிறகு நான் யோசித்து அதை மாற்றி ''குலுங்கிடும் பூவிலெல்லாம்'' என்று எழுதிக் கொடுத்தேன். ''கமழ்ந் திடும்'' என்பதிலே வருகிற அந்த 'ழ'கரம் இருக்கிறதே அது அந்த ஒலிப்பதிவிலே சரியாகப் பதியாது என்று சொன்னார்கள். அதனால்தான் எனக்குக் கோபம். என்னுடைய ''கமழ்ந்திடும்'' என்ற வார்த்தையையே சரியாகப் பதிவு செய்ய முடியாத இந்தக் கருவி கார் ஒலியையா பதிவு செய்து விடும்?'' என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அன்றைக்குச் சொன்னார்கள்.

ஏன் இவைகளைச் சொல்லுகிறேன் என்றால்; தான் சொல்லுகின்ற சொல்—தான் எழுதுகின்ற எழுத்து அதில் ஒரு திருத்தமோ—அல்லது அது சரியில்லை; அதைப் பதிவு

செய்ய இயலாது என்று கூறவோ உரிமை படைத்தவர்கள் அல்லர் என்ற அளவுக்கு அத்தகைய துணிச்சலும், அதை எடுத்துச் சொல்லுகின்ற ஆற்றலும், அத்தகைய வீரமும் பொருந்தியவராக புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் திகழ்ந்தார்கள்.

பாரதிதாசன் அவர்களை—பேரறிஞர் அண்ணா அவர்கள் நிதி வழங்கி சிறப்பித்த நிகழ்ச்சியை என்னுடைய நண்பர் அன்பில் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டினார்கள்.

கவிஞர்களிடத்திலே தனிப்பட்ட முறையிலே சில குறை பாடுகள் இருக்கலாம். நாம் பாரதிதாசன் என்றதும், அவருடைய உயர்ந்த தோற்றம்—நான் ஒரு கவிதையிலே அவரைப் பற்றி எழுதியிருப்பதைப் போல "நெற் கதிர் கட்டு மீசை" நெடிய உருவம்—வேங்கை போல் நிமிர்ந் திருக்கின்ற அந்தச் சாயல்—அந்தக் கம்பீரம் இவைகளை எல்லாம் மறந்து விட்டு, பாரதிதாசன் என்றதும் அவரு டைய இயல்புகள், அவருடைய குணாதிசயங்கள், அவரு டைய செயல்கள் இவைகளை எல்லாம் மறந்து விட்டு நம் முன்னால் நிற்க வேண்டியது.

**"சிற்றூரும் வரப்பெடுத்த வயலும்**
**ஆறுதேக்கிய நல்வாய்க்காலும் வகைப்படுத்தி**
**நெற்சேர உழுதுழுது பயன் விளைக்கும்**
**நிறை உழைப்புத் தோள்களெல்லாம் எவரின்**
**தோள்கள்?"**

என்று கேட்டாரே அந்தக் கேள்விதான் நம் முன்னால் நிற்க வேண்டுமேயல்லாமல், அன்பில் குறிப்பிட்டதைப் போல பாரதிதாசன் என்கின்ற ஒரு தனி மனிதன் அல்ல.

பாரதிதாசன் என்பவர் கவிதையின் வடிவம்!
பாரதிதாசன் என்பவர் தமிழின் உருவம்!

**"வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும்**
**தோள்கள் எங்கள் வெற்றித் தோள்கள்..."**

''வெங்குருதி தனிற் கமழ்ந்து வீரஞ்செய் கின்றதமிழ்
எங்கள் மூச்சாம்''.

என்றுரே அந்தக் கவிதை வடிவம்தான் நம் முன்னல் நிற்க வேண்டுமே அல்லாமல் வேறு அல்ல.

எனக்கும் பொன்னிவளவனுக்கும் கூட அடிக்கடி சச்சரவு வரும். என்மீது கோபித்துக் கொள்வார். அடிக்கடி என்மீது சினம் கொள்வார். நான் அப்பொழுதெல்லாம் பொன்னிவளவன் என்கின்ற-இங்கே நம்முடை கவிதைப் பித்தன் சொன்னுரே, அல்லது எழிலரசு குறிப்பிட்டாரே அவர்களைப் போன்று நான் இங்கே 'ஹிப்பிமுடி' வைத்த மனிதனை அல்ல நான் பார்ப்பது.

## திரைப்படங்கள் பற்றி பாரதிதாசன்

நான் பொன்னிவளவன் என்று எண்ணுகிற பொழுது, அவருடைய புரட்சிகரமான கவிதைகளைத் தான் நான் பாராட்டுகிறேனே அல்லாமல் - எத்தனை நெருக்கடி, எத்தனை அடக்கு முறை வந்தாலும் நான் கொள்கையிலே இருந்து மாறமாட்டேன் என்று ஓராண்டு காலம் 'மிசா' கைதியாக சிறைச் சாலையிலே இருந்ததே அந்த உருவத்தினுடைய அந்தக் கொள்கையைத்தான் பார்க்கிறேனே அல்லாமல், தனிப்பட்ட ஒரு மனிதரை அல்ல நான் பார்ப்பது.

அதைப் போலத்தான் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனையும் நாம் நோக்குகின்றோம்.

பாரதிதாசன் நம்முடைய திரைப்படங்களைப் பற்றி அந்தக் காலத்திலேயே பாடினுர்.

''என் தமிழர் படமெடுக்க ஆரம்பஞ் செய்தார்;
எடுத்தார்கள் ஒன்றிரண்டு பத்து நூருக!
ஒன்றேனும் தமிழர் நடை யுடை பாவனைகள்

உள்ளதுவாய் அமைக்கவில்லை உயிர் உள்ளதில்லை!
ஒன்றேனும் தமிழருமை உணர்த்து வதாயில்லை!
ஒன்றேனும் உயர் நோக்கம் அமைந்தது வாயில்லை!

என்று கூறிவிட்டு

"அத்தனையும் கழித்துப் பார்த்தால்
அத்திம்பேர் அம்மாமி என்ற தமிழர்தான் மிச்சம்!"

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நம்முடைய திரைப் படங்களைப் பற்றிப் பாடினார்.

அவருடைய வேதனையை நீக்குகின்ற வகையிலேதான் அண்ணா அவர்களின் 'வேலைக்காரி' வந்தாள்!

அந்த வேலைக்காரி—தமிழ்நாட்டு தெருக்களிலே- தமிழ் நாட்டு கூடத்திலே - தமிழர்களுடைய மனதிலே இருந்த மூடநம்பிக்கைக் குப்பைகளை எல்லாம் பெருக்கி எறிந்தாள்!

# 4

# திக்கெட்டும் பரவச் செய்வோம்

**தளபதி. கி. வீரமணி**

- திராவிடர் கழக இலக்கிய அணி சார்பாக 1982ல் புரட்சிக் கவிஞர் விழா பெரியார் திடலில் சிறப்பாக நடைபெற்றது.
- திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் தளபதி கி. வீரமணி அவர்கள் நிகழ்த்திய வீரமிக்க உரையின் சுருக்கம்.
- 'விடுதலை' இதழில் வெளிவந்தது. அனுமதியுடன் இங்கே வெளியிடப்படுகிறது.

புரட்சிக் கவிஞரின் பிறந்த நாள் இன்று! இருட்டடிப் புக்களையும் மீறி முகிலைக் கிழித்துவரும் முழுமதிபோல் புரட்சிக் கவிஞரின் ஆற்றல் இன்றைக்கு வெளிவந்து கொண்டிருப்பது கண்டு தன்மான உள்ளங்கள் பூரிக் கின்றன.

தந்தை பெரியார் கொள்கையிலே புரட்சிக் கவிஞர் தம்மை இணைத்துக் கொண்டதுதான் இந்தச் சமுதாயத்தில் அவர் செய்த பாவமாக்கப்பட்டு—இருட்டடிப்புக்குள் ளானார்.

புரட்சிக் கவிஞரின் பாடல்களோ லட்சியத் தீப் பொறிகள். புரட்சி வார்ப்புகள்.

பொதுவுடைமையைப் பாடிய கவிஞன். இவரைப் போல் எவரும் இல்லை. ஆனால் பொதுவுடைமை இயக்கத் தினரோ புரட்சி கவிஞருக்கு உரிய சிறப்பை அளிக்கத் தவறி—பாரதிக்கே பல்லக்குச் சுமந்து கொண்டிருக் கின்றனர்.

தமிழ் கூறும் நல்லுலகத்தில்—இன்று தன்மானக் குயில் களாகப் பாடிதிரியும் ஒரு மாபெரும் பட்டாளத்தைத் தனது பரம்பரையாக உருவாக்கிச் சென்றிருக்கும் பெரும் சிறப்பு புரட்சிக் கவிஞருக்குத் தான் இருக்கிறதே தவிர வேறு எந்த மகாகவிக்கும் கிடையாது.

புரட்சிக் கவிஞரின் எழுச்சிப் பாக்கள்—அவ்வளவு பாதிப்பை ஒவ்வொரு உள்ளத்திலும் ஏற்படுத்தியது.

புரட்சிக் கவிஞரின் முழு வாழ்க்கை வரலாற்றைத் தொகுக்கும் பணி நடந்ததாக வேண்டும்.

பல்கலைக் கழகங்கள் புரட்சிக் கவிஞரின் பாடல்களைப் பாடதிட்டத்தில் சேர்க்க வேண்டும்.

புரட்சிக் கவிஞரை புரட்சிக் கவிஞர் என்றே அழைக்கப்படுதல் வேண்டும்.

மத்திய அரசு புரட்சிக் கவிஞருக்கு அஞ்சல் தலை வெளியிடவேண்டும்.

நியாயமான கோரிக்கைகளுக்காக திராவிடர் கழகம் புரட்சிக் கவிஞர் விழாவில் குரல் கொடுக்கும்.

புரட்சிக் கவிஞரின் கருத்தை திக்கெட்டும் சேர்ப்போம்.

சமுதாயப் புரட்சிக்கு புரட்சிக் கவிஞர் கொட்டிய போர்முரசத்தின் ஒலியை—எங்கெங்கும் கேட்க வைப்போம்.

புரட்சிக் கவிஞர் வாழ்க!

## 5

# எதிர்ப்புகளைக் கண்டு அஞ்சவில்லை

—பாவேந்தர் முழக்கம்

- பாவேந்தருக்கு 28—7—1946ல் சென்னையில் நிதி அளிப்பு விழா சிறப்பாக நடைபெற்றது.
- விழாவுக்கு நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்கள் தலைமை வகித்தார்.
- அறிஞர் அண்ணா அவர்கள் பாவேந்தருக்கு நிதி வழங்கினார்.
- நிதியைப் பெற்றுக் கொண்டு பாவேந்தர் நிகழ்த்திய உரைச் சுருக்கம் 'சக்தி' இதழிலிருந்து இங்கே வெளியிடப்படுகிறது.

## எதிர்ப்புகளைக் கண்டு அஞ்சவில்லை

எனக்கு இன்று அளித்த கௌரவத்திற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இது எனக்கு அளித்த கௌரவமல்ல; தமிழுக்கு அளித்த கௌரவம்.

செய்யத் துணிபவனுக்கு, எண்ணத் துணிபவனுக்குத் தான் வெற்றி கிட்டுகிறது. தன்னுடைய செயல் முறையும் கொள்கையும் சரியானதென்று நம்புபவன், எந்த எதிர்ப்புக்கும் அஞ்சி கொள்கையினின்றும் பிறழக் கூடாது. இவனுக்கு என்றாவது ஒருநாள் வெற்றி வந்தே தீரும். என் வாழ்நாள் முழுவதும் இதுவே என் கொள்கையாக இருந்து வந்திருக்கிறது. சுயேச்சையான மனோபாவத்திடம் எனக்கிருந்த அசைக்க முடியாத நம்பிக்கையின் பலன்தான் நான் இன்று பெற்றிருக்கும் இந்தப் பணமுடிப்பு

இன்று, தமிழகத்தில் பழமையின் சிறப்பைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தால் போதும் என்னும் மனோபாவம் பொதுவாகப் பரவியிருக்கிறது. இது முன்னேற்றத்திற்கு வழி காட்டாது. பழமையை உதறித் தள்ளி புது வழியை மேற்கொள்பவன்தான் உண்மையான சேவை செய்தவன்.

தமிழுக்குச் சிறந்த எதிர்காலம் இருக்கிறது. மக்களின் தமிழ்க் காதல் நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. கரையான் அரித்த பழைய துறையிலிருந்து மெல்ல மெல்ல விலகிப் புரட்சிக்கரமான புதுத் துறையில் செல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். இன்றைய நவயுக எழுத்தாளர்களும் கவிகளும், தமிழ் நாட்டில் எதிர்காலம் சிறப்படைய வேண்டுமானால், அதற்கு உண்மையாகவே புத்துயிர் பிறக்க வேண்டுமானால், இத்தனை எழுத்தாளர்களும், கவிகளும் குறுகிய சாதி வேறுபாடுகளைத் தகர்த்து எறியக் கங்கணம் கட்டிக் கொண்டு புறப்பட வேண்டும். அடிமை மனப்பான்மையை ஒழித்து சுயேச்சையான எண்ணத்தையும், பரந்த நோக்கங்களையும் வளர்க்க முற்பட வேண்டும்.

''இந்த விஷயத்தைப் பற்றி எழுது'' என்று கவிஞனிடம் ஒப்பந்தம் பேசுவது நடக்காத காரியம். குறிப்பிட்ட ஒரு விஷயத்தைப் பற்றி இன்னொருவர் சொல்லி, கவி எழுத முடியாது. ஒரு கொடுமையை அல்லது ஒரு காட்சியைக் கண்ட அளவில் உணர்ச்சி தூண்டக் கவி எழுத வேண்டும்.

என் இளைய நண்பர்களுக்கு நான் கூற விரும்புவது இதுதான்! தமிழ்படி; தமிழ் பேசு, தமிழ் எழுது. கொடுமை கண்டவிடத்து எதிர்த்துப் போராடு. யாரேனும் தமிழைப் பழித்தால் லேசில் விடாதே.

அச்சமின்மையை வளர். புரட்சி மனப்பான்மை என்னுள் புகுந்த பொழுது எனக்கு எவ்வளவோ எதிர்ப்புகள் ஏற்பட்டன. நான் அவைகளைக் கண்டு அஞ்சவில்லை. ஏனெனில் எதிர்ப்பிலிருந்து நன்மை பிறக்கிறது, அறிவு வளர்கிறது. பாரதியார் ''அச்சம் தவிர்', என்றும் ''போர் முனை விரும்பு'' என்றும்தான் கூறியிருக்கிறார் தமிழ் வாழ்க!

# 6

# பாவேந்தர் வாழ்க்கை நிகழ்ச்சிகள்

—இராம. அண்ணாமலை

- விடுதலை இயக்கத்தில் பங்கு கொண்ட தேசபக்தர் திரு. அண்ணாமலை நல்ல ரசிகர். தமிழ் அறிஞர் களுடனும் தேசியத் தலைவர்களுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர். பாவேந்தரையும் நன்கு அறிந்தவர்,
- முல்லை முத்தையாவும் அண்ணாமலையும் இளமைக் காலத் தோழர்கள். பல ஆண்டுகள் இணைந் திருந்தவர்கள்.
- பாவேந்தரைப் பற்றிய நிகழ்ச்சிகளைத் தகுந்த ஆதாரங்களோடு கூறுகிறார்.

- புதுச்சேரி கனக சபை முதலியார். இலக்குமி அம்மையாருக்கு மூன்றுவது மகனுக 1891, ஏப்ரல் 29ல் பிறந்தார். அவருக்கு பெற்றோர் இட்ட பெயர் சுப்புரத்தினம்.
- ஆசிரியர் திருப்புளிசாமி ஐயாவிடம், ஆரம்பக் கல்வி கற்றார்.
- மகா வித்துவான் பெரியசாமி ஐயாவிடமும், பங்காரு பத்தரிடமும் இலக்கண இலக்கியங் களையும், வேதாந்த சித்தாந்தப் பாடங்களையும் பயின்றார்.
- 1908ல் 'வித்வான்' தேர்ச்சி பெற்றார்.
- இளமையிலேயே கவிதை இயற்றும் புலமை பெற்றார்.
- வேணு நாயக்கர் என்பவர் இல்லத்தில் நிகழ்ந்த திருமணத்துக்குச் சென்றிருந்தார் சுப்புரத்தினம், திருமண நிகழ்ச்சிக்குப் பிறகு விருந்து நடை பெற்றது. அதன் பின்னர் பாரதியாரின் தேசியப் பாடல் ஒன்றைப் பாடினார். சுப்புரத்தினம். அங்கே வந்திருந்த பாரதியாரும் அந்தப் பாடலைக் கேட்டு மகிழ்ந்தார். அதன் பின்னர், பாரதி யாரிடம் சுப்புரத்தினத்தை நண்பர்கள் அறிமுகப் படுத்தி வைத்தனர்.
- காரைக்காலைச் சேர்ந்த நிரவி என்னும் கிராமத்துப் பள்ளியில் சுப்புரத்தினம் ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.
- அப்பொழுது இளமையின் மிடுக்கோடு திகழ்ந் தார். "அவரும் புதிதாக வந்திருக்கும் ஒரு மாணவரோ என மற்ற மாணவர்கள் எண்ணிக் கொண்டிருந்தனராம். தலைமை ஆசிரியர் வந்து, புதிதாக வந்திருப்பவர் ஆசிரியர் என்று கூறிய பின்னரே விஷயம் புரிந்ததாம்.

- ☐ ஆசிரியரின் வயது பதினெட்டு! மாணவர்களில் பத்தொன்பது இருபது வயது உடையவர்களும் இருந்தனராம்!

- ☐ புதுச்சேரியில் அப்போது தங்கியிருந்த இந்திய விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்த அரவிந்தர், வ. வெ. சு ஐயர், டாக்டர் வரதராஜுலு நாயுடு ஆகியோருடன் சுப்புரத்தினத்துக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது.

- ☐ சுப்புரத்தினம் பாடிய பாடலைக் கேட்டு மகிழ்ந்த பாரதியார், அந்தப் பாடலின் தலைப்பில், "ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலத்தைச் சேர்ந்த கனக சுப்புரத்தினம் எழுதியது" என்று குறிப்பிட்டு, சென்னையில் இருந்த 'சுதேச மித்திரன்' பத்திரிகைக்கு அனுப்பி வைத்தார்.

- ☐ சுப்புரத்தினம் பாரதியாரிடம் கொண்டிருந்த அளவற்ற பற்று காரணமாகவும், மதிப்பாலும் தம்முடைய பெயரை பாரதிதாசன் என அமைத்துக் கொண்டார். பாரதிதாசன் என்றே கையொப்பமும் இட்டு வந்தார்.

- ☐ பாரதிதாசன் பல புனை பெயர்களில் கவிதை, கட்டுரை, தேசீயப் பாடல்கள் எழுதி வந்தார்.

- ☐ புதுவை கே. எஸ். ஆர், கண்டெழுதுவோன், கிறுக்கன், கிண்டல்காரன், K. S. R, K.S. பாரதி தாசன் இப்படியாகப் பல பெயர்களில் எழுதினார்.

- ☐ பாரதிதாசன் என்ற பெயரே இறுதியாக நிலைத்து அவருக்குப் புகழைத் தந்தது.

- ☐ சிதம்பரம்—புவனகிரிக்கு அடுத்த பெருமாத்தூர் பரதேசி முதலியார் மகள் பழநியம்மாளை 1921ல் திருமணம் புரிந்து கொண்டார்.

- இந்திய விடுதலை இயக்கம் தீவிரமாக இருந்த காலம். கதர்துணிகளை தோளில் சுமந்து தெருத் தெருவாகச் சென்று விற்பனை செய்திருக்கிறார் பாரதிதாசன்

- பாரதியாரின் 'இந்தியா' பத்திரிகையை அச்சிட்டு வெளியிட இரகசியமாக ஒத்துழைத்திருக்கிறார் பாரதிதாசன்

- பிரெஞ்சு அரசுக்கு எதிரான நடவடிக்கையில் பாரதிதாசன் ஈடுபட்டார் என்ற குற்றம் சாட்டப்பட்டு, ஒன்றரை ஆண்டு சிறை தண்டனை பெற்றார் பாரதிதாசன். இடைக்காலத்தில் விடுதலை அடைந்தார்.

- 'தேச சேவகன்', 'புதுவை கலைமகள்' 'தேசோபகாரி', 'தேசபக்தன்', 'ஆனந்த போதினி', 'சுதேச மித்திரன்,' 'தூய்ப்ளேக்ஸ்', 'தமிழரசு' ஆகிய இதழ்களில் கதை, கட்டுரை, கவிதை K. S பாரதிதாசன் என்ற பெயரில் எழுதி வந்திருக்கிறார்.

- "ஸ்ரீ மயிலம் சுப்பிரமணியம் துதியமுது" என்ற சிறு நூலை 1926ல் பாரதிதாசன் இயற்றினார்.

- "கதர் இராட்டினப் பாட்டு" என்ற சிறு நூலையும் 1930ல் இயற்றி யுள்ளார்.

- பாரதிதாசனுக்கு சரசுவதி, வசந்தா, ரமணி என்னும் மூன்று பெண்களும், கோபதி என்ற ஆணும் பிறந்தனர்.

- கோபதி என்னும் பெயரே பின்னர், மன்னர் மன்னன் என மாற்றம் பெற்றது.

  "சிறுவர் சிறுமியர் தேசீய கீதம்", "தொண்டர் வழிநடைப் பாட்டு" முதலிய சிறிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

- 'புதுவை முரசு' என்னும் வார இதழை, பாரதிதாசன் ஆசிரியராக இருந்து நடத்தியிருக்கிறார்.

- ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் கவிதா மண்டலம்'' என்னும் மாத இதழ்-முழுதும் பாடல்களாகவே அமைந்தது- அதன் ஆசிரியர் பாரதிதாசன். அந்த இதழில், விளம்பரம் கூட கவிதையாகவே வெளிவந்துள்ளது.

- நாடகங்களும் எழுதியிருக்கிறார். பல நாடகங்களுக்கு பாடல்களும் புனைந்திருக்கிறார்.

- ''இரணியன் அல்லது இணையற்ற வீரன்'' என்னும் நாடகத்தை எழுதினார். பெரியார் ஈ. வே. ரா அவர்கள் தலைமையில் அந்த நாடகம் அரங்கேறியது. அதில் குத்தூசி குருசாமி இரணியனாகவும் திருவாசகமணி பாலசுப்பிரமணியம் பிரகலாதனாகவும் நடித்திருக்கின்றனர்,

- திருமதி குஞ்சிதம் குருசாமி அவர்களின் முயற்சியால், கவிஞரின் கவிதைகளை எல்லாம் தொகுத்து கடலூர் தி. கி. நாராயணசாமி நாயுடு அவர்களின் பொருள் உதவியால், ''பாரதிதாசன் கவிதைகள்''—எட்டணா விலையில், 1938ல் வெளியிடப் பெற்றது. அந்த நூலில் நாராயணசாமி நாயுடுவுக்கு கவிதையாலே சமர்ப்பணம்' கூறியிருக்கிறார் கவிஞர்.

- பெரியார் ஈ. வே. ரா. அவர்களுடைய தொடர்பும், 'சுயமரியாதை இயக்கத்தின் ஒப்பற்ற பாவலர்' என்னும் பாராட்டும் கவிஞருக்குக் கிடைத்தது.

- 'குடும்பக் கட்டுப்பாடு' பற்றி முதன்முதலில் பாடல் எழுதிய கவிஞர் தமிழ்நாட்டிலேயே பாரதிதாசனே!

- செட்டிநாட்டு அன்பர்கள் கூட்டுறவோடு 1943ல் சென்னை, சாந்தோம் நெடுஞ்சாலையில் 'முத்தமிழ் மன்றம்' நிறுவினர். அதில் ஆடல், பாடல், நாடகம் என முத்தமிழையும் முழங்க செய்தார். அது புது முயற்சி! சேலம், திருச்சி ஆகிய நகரங்களில் முத்தமிழையும் முழங்க வைத்தனர். ஆனால், மக்களிடையே அதற்குப் போதிய வரவேற்பு இல்லாமல், பல ஆயிரம் ரூபாய் இழப்பாயிற்று.

- மேற்படி முத்தமிழ் மன்றக் குழுவில் கவிஞர் சுரதாவும் சேர்ந்து பணியாற்றினர்.

- முல்லை முத்தையா 1943ல் "கமலா பிரசுலாயம்" என்னும் பதிப்பகத்தை நிறுவி, ராஜாஜியின் "கள் ஒழிக!" தினமணி.டி. எஸ். சொக்கலிங்கத்தின் "எனது ராஜினமா", தினமணி துணை ஆசிரியர் ஏ. ஜி. வேங்கடாச்சாரியின், "சோவியத் யூனியன்" ஆகிய நூல்களை வெளியிட்டிருந்தார்.

- முல்லை முத்தையா, நூர் முகம்மது, செல்லப்பா ஆகிய மூவரும் கவிஞரைக் காண முத்தமிழ் நிலையம் சென்றனர். கவிஞரிடம் நூர்முகம்மது, "தோழர் முத்தையா ஒரு தேசீயப் பதிப்பாளர்; ராஜாஜி, சொக்கலிங்கம், வேங்கடாச்சாரி ஆகியோர் புத்தகங்களை வெளியிட்டிருக்கிறார்" என்று கூறினர். "அத்தகைய பதிப்பாளர் தான் எனக்குத் தேவை" என்று கூறி, உடனே "அழகின் சிரிப்பு" கையெழுத்துப் பிரதியைக் கொடுத்து வெளியிடச் சொன்னதோடு, மூத்தமகள் சரசுவதியின் திருமணம் நிச்சயம் செய்திருந்த சமயம் ஐநூறு ரூபாய் தேவை என்றும் கூறினர் கவிஞர். அடுத்த வாரம் செல்லப்பாவும் முத்தையாவும் கானாடு காத்தான் வைசு சண்முகம் அவர்களின் மூலம் ஐநூறு ரூபாயை சேர்ப்பித்தனர்.

- 1944ல் கவிஞரின் நூல்களை வெளியிடுவதற்காகவே முல்லைப் பதிப்பகத்தை அ. திருநாவுக்கரசு செட்டியார் ஒத்துழைப்போடு முத்தையா தொடங்கினார்.

- ''அழகின் சிரிப்பு'' அழகான பதிப்பாக, முல்லை பதிப்பகத்தின் முதல் வெளிடாக வந்தது.

- முல்லைப் பதிப்பகம் பிராட்வே 59-ம் எண் கட்டிடத்தில் இயங்கி வந்தது.

- கவிஞரின், அழகின் சிரிப்பைத் தொடர்ந்து 'நல்ல தீர்ப்பு', 'பாண்டியன் பரிசு' 'காதல் நினைவுகள்'' 'எதிர்பாராத முத்தம்' 'குடும்ப விளக்கு' இரண்டாம் பகுதி, 'பாரதிதாசன் கவிதைகள்', 'தமிழியக்கம்', 'இருண்டவீடு' ஆகியநூல்களை கவர்ச்சியாக—அழகாக ஆர்வத்தோடு வெளியிட்டார் முத்தையா.

- அப்பொழுது அரசு நூலகங்களோ, இப்போது ஆங்காங்கே காணப்படுவதைப் போல புத்தக விற்பனை யாளர்களோ கிடையாது. வாசகர்களையே நம்பி இருந்த காலம். ஆனாலும், தமிழ் ஆர்வம் காரணமாக நூல்கள் நல்ல விற்பனை ஆயின.

- கவிஞர் சென்னைக்கு வரும்போது முல்லை பதிப்பகத்தில் தங்குவார். கவிஞரைக் காண திருவாளர்கள் புதுமைப்பித்தன், அப்பாத் துரையார், நடிகமணி நாராயணசாமி, கொத்தமங்கலம் சுப்பு, தி. ஜ. ர; கவிஞர் கம்பதாசன், நாரண துரைக்கண்ணனார், சக்கரவர்த்தி நயினார், எஸ் வி. லிங்கம், அவ்வை டி. கே. சண்முகம், காஞ்சி மணிமொழியார், பேராசிரியர் அன்பழகன், கவிஞர் கண்ணதாசன் முதலானோர் முல்லைப் பதிப்பகத்துக்கு வந்து கவிஞரைக் கண்டு மகிழ்ந்து.

உரையாடிச் செல்வதை நான் பல முறை கண்டிருக்கிறேன்.

- முல்லைப் பதிப்பகம் புத்தக விற்பனை நிலையமாகக் காணப்படாமல், இலக்கிய மண்டபமாகவும், தமிழ் அறிஞர் மன்றமாகவும் காட்சி தரும்.

- அறிஞர் அண்ணா அவர்களும் முல்லைப் பதிப்பகத் துக்கு அடிக்கடி வருவார்கள். அவர்களைக் காணவும் நண்பர்கள் வருவார்கள்.

- பிற்காலத்தில் பொதுவுடைமைக் கவிஞராகத் திகழ்ந்த தமிழ்ஒளி புதுவையில் பாவேந்தர் இல்லத்தில் இருந்து பின்னர் முல்லைப் பதிப்பகத் துக்கு வந்து சில மாதங்கள் இருந்தார். அவரைக் கரந்தைப் புலவர் கல்லூரிக்கு அனுப்பி வைத்தார் கவிஞர்.

- "நம்முடைய இயக்கத்துக்கு, முல்லைப்பதிப்பகம் ஒரு பாசறையாக விளங்கியது" என நடிகமணி டி. வி. நாராயணசாமி அவர்கள் அடிக்கடி கூறு வார்கள்.

- முதல்வர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர் அவர்கள், அண்ணா அவர்களைக் காண முல்லைப் பதிப்பகத்துக்கு வந்ததையும் நான் பார்த் திருக்கின்றேன்.

- பதிப்பாளர்களுக்கும் நூலாசிரியர்களுக்கும் உள்ள 'ராயல்டி', 'முழு உரிமை' போன்ற நிலைமை இல்லாமல், கவிஞருக்கும் முல்லைப்பதிப்பகத் துக்கும் நெருங்கிய நேசப் பிணைப்பு நிலவியது. கவிஞருக்குத் தேவையான போதெல்லாம் முத்தையா பணம் கொடுத்துக் கொண்டிருப்பார்.

□ கவிஞருக்கு புதுவையில் சொந்த வீடு இல்லை என்ற குறை இருந்தது. அவர்கள் குடி இருந்த வீட்டை விற்பதற்கு வீட்டின் உரிமையாளர் எண்ணினர். முத்தையாவும் அதை உணர்ந்தார்

□ அடுத்து சில நாட்களில், ''தாங்கள் இப்பொழுதும் வசித்துக் கொண்டிருக்கும் வீட்டையோ அல்லது வேறு ஒரு வீட்டையோ விலை பேசி தீர்மானியுங்கள். அதை வாங்கி விடலாம்'' என்று உற்சாகமாவும், பரந்த மனப்பான்மையோடும் கவிஞரிடம் முத்தையா கூறினர். கவிஞரின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. ஒரு வாரத்தில் தோழர்கள் திருநாவுக்கரசு செட்டியாரும், முத்தையாவும் புதுவை சென்று கவிஞரிடம் ஒரு தொகை கொடுத்து இப்பொழுது, கவிஞரின் நினைவு—நூலகமாகத் திகழ்கின்ற அந்த பெருமாள் கோவில் தெரு வீட்டை விலைக்கு வாங்கப் பெற்றது.

□ கவிஞர் நன்றிப் பெருக்கோடு அக மகிழ்ந்து, தாமே வலிந்து ஒன்பது நூல்களை முல்லைப் பதிப்பத்கதுக்கு முழு உரிமை எழுதிக் கொடுத்து தம் கடமையை நிறைவேற்றினர்.

□ திருச்சி பழநியப்பா பிரதர்ஸ் என்னும் புத்தக நிலையத்தில் அப்பொழுது அலுவலில் இருந்த செல்லப்பாவும் முல்லைப் பதிப்பகம் முத்தையாவும் நெருங்கிய நண்பர்களா யிருந்தனர். தனக்குச் சொந்தமாக ஏதேனும் தொழில் நடத்த வேண்டும் என்ற எண்ணத்தை முத்தையாவிடம் செல்லப்பா கூறினர்.

அடுத்து சில மாதங்களில், செல்லப்பாவை சென்னைக்கு அழைத்து வந்து, முல்லைப் பதிப்பகத்துக்கு அடுத்த அறையை வாடகைக்கு ஏற்பாடு செய்து,

'பாரி நிலையம்' என்ற பெயரைச் சூட்டி, முல்லைப் பதிப்பக வெளியீடுகளுக்கு விற்பனையாளராக அமைத்து உதவினார் தோழர் முத்தையா.

- இலக்கிய மாத இதழ் இல்லாத குறையை 'முல்லை' நிறைவு செய்தது.
- 1946ல் 'முல்லை' மாத இதழை தாமே சொந்தமாகத் தொடங்கினார் முல்லை முத்தையா.
- திரு. வி. க, கா. நமச்சிவாயர், தண்டபாணி தேசிகர், சோமசுந்தர பாரதியார் முதலான அறிஞர்களின் தரமான கட்டுரைகளைத் தாங்கி முல்லை முறுவலிக்கும்.
- கவிஞரிடம் முத்தையாவுக்குள்ள பற்றுதல் காரணமாக, 'முல்லை' யில் 'ஆதரவாளர் கவியரசர் பாரதிதாசன்'' எனக் குறிப்பிட்டு, ஒவ்வொரு இதழிலும் கவிஞரின் கவிதை, கவிஞரைப் பற்றிய சுவையான நிகழ்ச்சியையும் இடம் பெறச் செய்தார்.
- 'முல்லை' யின் முதல் இதழைக் கண்ட தமிழ்ப் பெரியார் திரு. வி. க அவர்கள், ''முல்லை வரப்பெற்றேன். அதில் முல்லை நகைபுரிதல் கண்டேன். முல்லையின் முயற்சியால் நம் தாய் அரியாசனம் ஏறுவாள்'' என்று பாராட்டுத் தெரிவித்தார்.
- 'முல்லை' க்கு தரமான வாசகர்களின் வரவேற்புக் கிடைத்தது.
- காந்தியடிகளின் எழுபதாம் ஆண்டு நிறைவுக்காக, டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள் (இந்தியக் குடியரசின் முன்னாள் தலைவர்) காந்தியடிகளைப்பற்றி, உலக அறிஞர்களின் கட்டுரைகளையும் கருத்துரைகளையும் தொகுத்து 1939ல் பெரிய நூல் ஒன்றை வெளியிட்டிருந்தார்.

அதைப் பார்த்த முல்லை முத்தையா, கவிஞரின் ஐம்பத்து நான்காம் ஆண்டு நிறைவைக் கருதி, தமிழ் அறிஞர்கள், புலவர்கள், மறுமலர்ச்சி எழுத்தாளர்கள், கவிஞர்கள் ஆகியோருக்கு எழுதி கட்டுரை, கருத்துரை, கவிதைகளைச் சேகரித்துத் தொகுத்து ''புரட்சிக் கவிஞர்'' என்ற பெயரில் வெளியிட்டார்.

□ தமிழிலே வெளிவந்த முதல் தொகுப்பு நூல் அது!

□ கவிஞரைப் பற்றி வெளிவந்த முதல் தொகுப்பு நூலும் அதுதான்! கவிஞரின் சிறப்பைக் கூறி ஒருமைப்படுத்திய நூல் அது! பிற்காலத்தில் ஆய்வாளர்களுக்கு அந்த நூல் மிகவும் உதவியாக அமைந்தது பெருமைபட வேண்டியதாகும்.

ஆய்வு நூல்களை எழுதிய அனைவரும், 'புரட்சிக் கவிஞர்' நூலிலிருந்து தாராளமாக மேற்கோள் காட்டியுள்ளனர்.

□ 'புரட்சிக் கவிஞர்' என்னும் அந்த நூலின் முதல் பிரதியைக் கண்ட கவிஞர் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தார்.

எப்பொழுதும் உயர்வான பொருளை, ருசியான உணவை, சிறந்த கருத்தை, அழகான நூலைப் பாராட்டும் கலை உள்ளம் கொண்டவர் கவிஞர்.

□ ''பாரதிதாசன் யார்?'' என்றால், இதோ இந்தப் புத்தகத்தைக் கொடுத்தால் போதும்'' என்று கூறி, 'புரட்சிக் கவிஞர்' என்னும் அந்த நூலைச் சுட்டிக் காட்டினார். நான் உடனிருந்து அதை வெகுவாக ரசித்தேன்.

□ ''பாரதியாருக்குப் பிறகு, நான் பாராட்டக்கூடிய கவிஞனே இல்லை'' என நாவலர் சோமசுந்தர

பாரதியார் கூறலானார். உடனே, முல்லை முத்தையா கவிஞரின் நூல்களை எல்லாம் சோமசுந்தர பாரதியாருக்கு கொடுத்து அறிமுகப் படுத்தினார். அதன் பின்னர் பாரதியார், முத்தையாவுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதினார்.

☐ 'தங்க விளக்கானாலும் தூண்டுகோல் வேண்டும்' என்பது பழமொழி. பாரதிதாசன் புகழைப் பரப்புவதை ஒரு இயக்கமாகவே முத்தையா நடத்தி வந்தார்.

☐ "நம்ம பையன்தான் பாரதிதாசன் நூல்களை வெளியிடுகிறானாமே? அவன் ஏன் இதைச் செய்கிறான்? எனப் 'பண்டிதமணி கதிரேசன் செட்டியார் அவர்கள் ஒரு சமயம் அங்கலாய்த்துக் கொண்டார்.

☐ தமிழ்க்கடல் ராய. சோவும், கம்பன் புகழ் பரப்பிய சா. கணேசனும் அந்தக் காலத்தில் பாரதிதாசனுக்கு எதிர்ப்புக் காட்டி வந்திருக்கிறார்கள்.

☐ கவிஞருக்கு நிதி திரட்டி அளிப்பதென 1946ல் முல்லை பதிப்பகத்தில் தீர்மானித்து, அறிஞர் அண்ணா அவர்களைப் பொருளாளராகவும், முல்லை முத்தையா, டி. என். இராமன் செயலாளர்களாகவும், இன்னும் சிலர் செயற்குழு உறுப்பினராகவும், கொண்ட குழு ஒன்று அமைக்கப் பெற்றது. [இந்தச் செய்தி தி. மு. க. வரலாறு முதல் பதிப்பில் வெளியாகி உள்ளது.]

☐ 'கல்கி' ஆசிரியர் கிருஷ்ண மூர்த்தி அவர்களை முல்லை முத்தையா சந்தித்துப் பேசி, நிதிக்குழு அறிக்கையை 'கல்கி' இதழில் வெளியிடச் செய்தார்.

- ஒரு சிலரின் தலையீட்டினால், நிதிக்குழு காஞ்சிக்கு மாற்றப்பட்டது.

  சென்னை பச்சையப்பர் விளையாட்டுத் திடலில், 29-6-1946 ல் நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் கவிஞருக்குப் பொன்னாடை போர்த்தி, 25,000 ரூபாய் நிதி அளித்து, சிறப்பிக்கப் பெற்றது. அறிஞர் அண்ணா அவர்கள் முன் நின்று, சிறப்பாகச் செய்தது, குறிப்பிடத்தக்கது.

- புதுவை அரசு பள்ளியில் முப்பத்தாறு ஆண்டுகள் பணி புரிந்த கவிஞர், 1946ல் ஓய்வு பெற்றார்.

- திருச்சியில் 1950ல் கவிஞருக்கு மணிவிழா கொண்டாடி, பொன்னாடை போர்த்தி, சிறிதளவு நிதியும் அளிக்கப் பெற்றது.

- புதுவை சட்டமன்றத் தேர்தலில், 1954ல் கவிஞர் தேர்ந்தெடுக்கப் பெற்று, சட்டமன்றத்தின் முதல் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

  1961ல், சிலருடைய கூட்டுறவில், கவிஞரின் 'பாண்டியன் பரிசைத்' திரைப்படமாகத் தயாரிப்பதற்காக, கவிஞர் சென்னையில் தங்கலானார். சிவாஜி கணேசன் முதலில் நடிப்பதாக ஒப்புக் கொண்டவர் பின்னர், மறுத்து விட்டாராம். ஓரளவு நஷ்டத்தோடு அந்த முயற்சி கைவிடப் பட்டது.

  1963ல் பாரதியார் வரலாற்றைத் திரைப்படமாகத் தயாரிக்க கவிஞர் முயன்றார். கவிஞரே அதில் நடிப்பதாக அறிவித்து இருந்தார். பிறகு அம்முயற்சி கைவிடப்பட்டது.

- 1964ல் ஏப்ரல் மாதம் கவிஞருக்குத் திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டது. உடனே சென்னை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

- ஏப்ரல் 21ம் நாள் கவிஞர் மரணம் அடைந்தார். பாடிப் பறந்த குயில் மறைந்தது. தமிழுக்கு பெரிய இழப்பு; தமிழர்கள் துக்கம் அடைந்தனர்.

- மறுநாள் கவிஞரின் உடல் புதுவைக்குக் கொண்டு செல்லப்பட்டு, புதுவைக் கடற்கரையில் அடக்கம் செய்யப் பெற்றது.

- புதுவை நகராட்சி 1965ல் கவிஞர் நினைவு மண்டபத்தை எழுப்பியது.

- 1968 ஜனவரி மாதம் சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில், தமிழக முதல் அமைச்சராக இருந்த அறிஞர் அண்ணு அவர்களின் முயற்சியால் சென்னைக் கடற்கரையில் கவிஞரின் முழு உருவச்சிலை நிறுவப்பெற்றது.

- புதுடில்லி, மத்திய அரசின் சாகித்திய அகாடமியினுல் 1969ல் கவிஞர் இயற்றிய 'பிசிராந்தையார்' என்ற நாடக நூலுக்கு ஐயாயிரம் ரூபாய் பரிசு வழங்கப் பெற்றது.

- புதுவை அரசு 1971 ஏப்ரல் மாதம் 29ம் நாள் கவிஞரின் பிறந்த நாளை அரசு விழாவாகச் சிறப்பாகக் கொண்டாடியது.

  புதுவை, பெருமாள் கோவில் தெருவில் இருந்த கவிஞரின் இல்லத்தைப் புதுவை அரசு விலைக்கு வாங்கி, கவிஞரின் குடும்பத்தாருக்கு உதவி புரிந்து; அந்த இல்லத்தைக் கவிஞரின் நினைவு நூலகமாகவும் காட்சிக் கூடமாகவும் ஆக்கியது.

- தமிழக அரசு 1975ல் சென்னை ராஜாஜி மண்டபத்தில் கவிஞரின் முழு உருவ வண்ணப் படத்தைத் திறந்து வைத்தது.

☐ புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களை முதலமைச்சராகக் கொண்ட தமிழக அரசு 1978ல் பாவேந்தரின் பிறந்த நாளான ஏப்ரல் மாதம் 29ம் நாள், விழாக் கொண்டாடிச் சிறப்பித்தது,

கவிதைப் போட்டி, ஓவியப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு அரசு பரிசு வழங்கியது.

பாவேந்தர் பாரதிதாசன் பரம்பரையில் கவி பாடித் திகழும் உவமைக் கவிஞர் சுரதா அவர்களுக்குத் தமிழக அரசு பத்தாயிரம் ரூபாய் பரிசு வழங்கி கௌரவித்தது.

☐ 1979 ஏப்ரல் 29 ஞாயிற்றுக் கிழமை பாவேந்தரின் 89வது பிறந்த நாள் விழாவைத் தமிழக அரசு கலைவாணர் அரங்கில் மிகச் சிறப்பாகக் கொண்டாடியது.

பாரதிதாசன் பரம்பரையில் கவி இயற்றிய காலஞ் சென்ற கவிஞர்கள் வாணிதாசன் எஸ். டி. சுந்தரம் குடும்பத்தினருக்கு தமிழக அரசு பத்தாயிரம் ரூபாய் பரிசு வழங்கியது.

☐ பாரதிதாசன் நூல்களை முதலில் வெளியிட்ட முல்லை முத்தையாவுக்கும், மற்றும் பாரதிதாசனைப் பற்றி நூல்கள் எழுதிய மூவருக்கும் தமிழக அரசு ஆயிரம் ரூபாய் வீதம் பரிசு வழங்கிப் பொன்னுடை அணிவித்து கௌரவித்தது.

கவிதைப் போட்டியில் வெற்றி பெற்ற மூவருக்கும் பரிசு அளிக்கப் பெற்றது.

- 1982 ஏப்ரல் 30ல் திருச்சியில் பாரதிதாசன் பல்கலைக் கழகம் தொடங்கப்பெற்றது.

- பாரதிதாசன் பரம்பரையில் கவிதை இயற்றிவரும் புத்தனேரி சுப்பிரமணியத்துக்கு தமிழக அரசு பத்தாயிரம் ரூபாய் பரிசு வழங்கியது.

- திராவிடர் கழக இலக்கிய அணி சார்பாக 1982ல் பாரதிதாசன் விழா கொண்டாடிச் சிறப்பித்தனர்.

# 7

# தமிழக அரசு நடத்திய முப்பெரும் விழா

---

- ☐ *திருச்சியில் 1982, ஏப்ரல் 29, 30 தேதிகளில் பாரதியார் விழா, பாவேந்தர் விழா, பாரதிதாசன் பல்கலைக் கழகத் தொடக்க விழா ஆகிய முப்பெரும் விழா சிறப்பாக நடைபெற்றன.*

- ☐ *விழாவின் சிறப்பைக் காண வாய்ப்பு இல்லாதவர்கள், நிகழ்ச்சிகளை அறிந்து மகிழ்வதற்கு, நிகழ்ச்சித் தொகுப்பு இங்கே விவரிக்கப்படுகிறது.*

- ☐ *உதவியவர் புலவர் தமிழ்ப் பித்தன் அவர்கள்*

- தமிழுக்கும், தமிழ்ப்பண்புக்கும் நிலைக்களமாக விளங்கும் திருச்சி நகரில், மகாகவி நூற்றாண்டு விழா, பாரதிதாசன் பிறந்த நாள் விழா, பாரதிதாசன் பல்கலைக் கழகத் துவக்க விழா ஆகிய முப்பெரும் விழாக்கள் 1982, ஏப்ரல் 29, 30 தேதிகளில் தமிழக அரசின் சார்பாக சிறப்பாக நடைபெற்றன.

- வெள்ளம் போல் தமிழர் கூட்டம், நகர் எங்கும் அலை பாய்ந்தது. பாவேந்தர் பாரதிதாசனுக்கும் அவரை "எழுக நீ புலவன்!" என வாழ்த்தி உரைத்த அவரது ஆசான் பாரதிக்கும், தமிழக அரசு விழா நடத்திப் பெருமை செய்வதைக் காண மக்கள் உவப்போடு திரண்டிருந்தனர்.

- பாட்டுப் புலவர்களுக்கு எடுக்கும் விழா, இசை வல்லுநர் எம். கே. தியாகராஜ பாகவதரின் கலை மன்றத்தில், 29. 4. 82 காலை 9 மணிக்கு பாவேந்தர் நல்லிசையுடன் துவங்கியது. இசை மாமணி சீர்காழி கோவிந்தராஜன் அவர்களின் குமாரர் திரு. சிவ சிதம்பரம் தனது குழுவினருடன் பாவேந்தரின் இசைப் பாடல்களைப் பாடி அரங்கத்தை வயப்படுத்தி விட்டார்.

- விழாவுக்கு வந்திருந்தோரை ஸ்ரீரங்கம் சட்ட மன்ற உறுப்பினர் ஆர். சௌந்தரராஜன் அவர்கள் வரவேற்று உரை நிகழ்த்திஞர்.

- மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் எஸ். டி. சோம சுந்தரம் அவர்கள் நிகழ்ச்சிக்கு தலைமை ஏற்று உரை நிகழ்த்திஞர்.

- மகாகவி பாரதியார் அவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகள், பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் ஆகியவற்றை எடுத்

துரைக்கும் வகையில் உருவாக்கப்பட்டிருந்த பொருட்காட்சி அனைவரையும் கவர்ந்தது.

- பாரதியார், பாரதிதாசன் எழுதிய நூல்களும், அவர்களைப் பற்றிய நூல்களும், கடிதங்களும், புகைப்படங்களும் அங்கே வைக்கப்பட்டிருந்தன. அரும் பெரும் களஞ்சியமாகத் திகழ்ந்த அந்தப் பொருட் காட்சியை, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ண சாமி அவர்கள் திறந்து வைத்தார்.
- மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் புலவர் புலமைப்பித்தன் அவர்கள் தலைமையில் கவி யரங்கம் நடைபெற்றது.
- திருவாளர்கள் மன்னர் மன்னர், ஈரோடு தமிழ் அன்பன், இளந்தேவன், பொன்னடியான், திருமதி ரோகிணி, ஆகியோர் கவியரங்கில் கவிதை பாடினர்.
- மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் நடுவராக இருந்து, "பாரதிதாசன் படைப்புகளில் விஞ்சி நிற்பது தமிழ் எழுச்சியே" என்றும் "சமுதாய மறுமலர்ச்சியே" என்றும் இருவகை விவாதம் கொண்டப் பட்டி மன்றம் நடை பெற்றது.
- "தமிழ் எழுச்சியே" என்ற பொருளில் திரு. அ.வ. இராசகோபாலன், திருமதி காந்திமதி, திரு. ஜெகந்நாதன் ஆகியோர் வாதிட்டனர்.
- "சமுதாய மறு மலர்ச்சியே" என்ற பொருளில் திரு. சத்திய சீலன், திருமதி அரசு மணிமேகலை, திரு. அறிவொளி ஆகியோர் வாதிட்டனர்.
- "பாரதிதாசன் படைப்புகளில் விஞ்சி நிற்பது தமிழ் எழுச்சியே" என நடுவர் தீர்ப்புக் கூறினர்.

- பிற்பகல் நிகழ்ச்சி 3. 30 மணிக்கு திருவையாறு அரசு இசைக் கல்லூரி மாணவியர் பாடிய பாரதி இசைப் பாடல்களுடன் தொடங்கியது.

- மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

- மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் "இளைய பாரதம்" என்னும் நிகழ்ச்சி நடைபெற்றது.

- செல்வி சுபா, செல்வன் மோகன சுந்தரம் செல்வி சித்திரா, செல்வன் இராமலிங்கம், செல்வி சீதா லட்சுமி, செல்வன் இரவீந்திரன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

- திருமதி அ. ரா. இந்திரா அவர்கள் தலைமையில் மகளிர் மன்றம் நிகழ்ச்சி நடைபெற்றது.

- 'டாக்டர் லீலாவதி, திருமதி நிர்மலா சுரேஷ்' திருமதி தங்க அன்புவல்லி, ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

- மாலை 6-30 மணிக்கு எல்லைக் காவல் படைத் திடலில் திறந்த வெளி அரங்கில், வண்ண விளக்கு ஒளியில் மகாகவி பாரதியார், பாவேந்தர் பாரதி தாசன் விழா நடைபெற்றது.

- விழாவுக்கு வந்திருந்தோரை மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் வரவேற்றுப் பேசினார்.

- மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமை வகித்து பாரதியார் திருவுருவப் படத்தை திறந்து வைத்து உரையாற்றினார்.

- மாண்புமிகு மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சி அவர்கள் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் திருவுருவப் படத்தை திறந்து வைத்து உரை நிகழ்த்தினார்.

- பாரதியும் பாண்டித்துரைத் தேவரும், பாரதியும் பரலி. சு. நெல்லையப்பரும், பாரதியும் சுப்பிரமணி சிவாவும், பாரதியும் உமறுப் புலவரும், பாரதியும் வாஞ்சிநாதனும், பாரதியும் சர்க்கரைச் செட்டியாரும், பாரதியும் வ. உ. சியும், ஆகிய தலைப்புகளில் முறையே திருவாளர்கள் ஆண்டித்தேவர், தஞ்சை இராமமூர்த்தி, பாலசுப்பிரமணியம், ஜே. எம். மியாகான், குமரி அனந்தன், பி. மாணிக்கம், எம். பி. பாலசுப்பிரமணியம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

- பாரதி, பாரதிதாசன் ஆகியோர் நினைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஓவியப் போட்டியில் பரிசு பெற்ற பள்ளி, கல்லூரி மாணவ மாணவியருக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசு வழங்கினார்.

- கலைமாமணி புத்தனேரி சுப்பிரமணியம் அவர்களுக்கு, பாவேந்தர் விருது வழங்கி, பத்தாயிரம் ரூபாய் அளித்து, பொன்னாடை போர்த்திச் சிறப்பித்த மாண்புமிகு முதல்வர் அரசுக் கலைஞர் கிளாரினட் இசை மேதை திரு. ஏ. கே. சி. நடராஜன் அவர்களுக்கும் விருது வழங்கிப் பாராட்டினார்.

- திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு அண்ணா தாசன் அவர்கள் நன்றி கூறினார்.

- கலைமாமணி வெண்ணிற ஆடை நிர்மலா குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சியுடன் முதல் நாள்

விழா முத்திரை பதித்த விழாவாக நிறை வேறியது.

- ஏப்ரல் 30-ம் நாள் காலை 9 மணிக்கு பாரதி தாசன் பல்கலைக் கழக வளாகத்தில் பத்தாயிரம் மரங்கள் நடு விழா தொடங்கியது.

- நாகலிங்க மரம் ஒன்றை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நட்டார்கள். அதன்பின், மாணவ மாணவியர் மரம் நடுவதை, திறந்த ஜீப்பில் சென்றவாறு பார்வை யிட்டார்.

- மரம் நடு விழாவில் பங்கு கொண்டவர்களையும், கலந்து கொண்டவர்களையும் மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் வரவேற்றுப் பேசினார்.

- பின்னர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் மரம் நடுவதன் அவசியம் குறித்து உரை நிகழ்த்தினார்.

- கருத்தரங்கிற்கு மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ச. இராமச் சந்திரன் அவர்கள் தலைமை யேற்று உரை நிகழ்த்தினார்.

- அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. எஸ். வி. சிட்டிபாபு, அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு. வ. செ. குழந்தைசாமி, காந்தி கிராமப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் மு. அறம், மதுரை காமராஜர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. வ. சுப. மாணிக்கம், கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. அ. வெங்கட் ராமன், தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. வி. ஐ. சுப்பிரமணியம் ஆகியோர் முறையே, பாரதி-பாரதிதாசன் கண்ட சமூக மறுமலர்ச்சி,

அறிவியல் வளர்ச்சி, பொருளியல் ஏற்றம், தமிழ்ப், பண்பாடு, பல்கலைக் கழகப் பணி ஆகிய தலைப்பு களில் உரையாற்றினர்.

- ☐ மாலையில், திருச்சி-சிந்தாமணி-அண்ணு சிலையில் இருந்து மாணவ மாணவியர் பங்கேற்ற, அலங் கார ஊர்திகளின் அணி வகுப்பு நடை பெற்றது.
- ☐ திருச்சி ரயில்வே நிலயப் பகுதியில் எல். ஐ. சி. அலுவலகம் அருகில், அமைக்கப்பட்டிருந்த தனி மேடையில் அமர்ந்தவாறு அணிவகுப்பினை மேதகு ஆளுநர் அவர்களும், அமைச்சர்களும் பார்வை யிட்டனர். ஊர்வலம் எல்லைக் காவல்படைத் திடலை அடைந்ததும், பாரதிதாசன் பல்கலைக் கழகத் தொடக்க விழா மேதகு ஆளுநர் திரு. சாதிக்அலி அவர்களின் தலைமையில் தொடங்கியது.
- ☐ வந்திருந்தோர் அனைவரையும், மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் வரவேற்றுப் பேசினர்.
- ☐ மேதகு ஆளுநர் தலைமை உரை நிகழ்த்தினர். அவரது ஆங்கில உரையை செயின்ட் ஜோசப் கல்லூரி பேராசிரியர் மொழி பெயர்த்தார்.
- ☐ அதன் பின்னர், பல்கலைக் கழகத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்.
- ☐ மத்திய அரசின் மாண்புமிகு பாதுகாப்பு அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் நிர்வாகக் கட்டடங்களுக்கு அடிக்கல்லை நாட்டினர்.
- ☐ மத்திய அரசின் மாண்புமிகு திட்ட அமைச்சர் திரு. எஸ். பி. சவான் அவர்கள் மாணவர் விடுதிக்கு அடிக்கல்லை நாட்டினர்.

- மாண்புமிகு தமிழக நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் பட்டமளிப்பு விழா மண்டபத்துக்கு அடிக்கல்லை நாட்டினர்,
- பாவேந்தர் பல்கலைக் கழகத் திறப்பு விழாவை முன்னிட்டு அவரது பெயர் பொறிக்கப்பட்ட அஞ்சல் உறையை மாண்புமிகு பாதுகாப்பு அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் வெளியிட, மாண்புமிகு தமிழக முதல்வர் அதைப் பெற்றுக் கொண்டார்.
- பல்கலைக் கழகச் சின்னம் பொறிக்கப்பட்ட கேடயங்களைச் சிறப்பு விருந்தினர்களுக்கு, மாண்புமிகு கல்வி அமைச்சர் வழங்கினர்.
- அடுத்து, சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு. சாந்தப்பா அவர்கள், முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள் ,மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.
- அதன்பின்னர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பேருரையாற்றினர்.
- பாரதிதாசன் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் மணி சுந்தரம் நன்றி கூறினர்.
- இரவு 10 மணிக்கு கலைமாமணி சாமுண்டீஸ்வரி குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சியுடன் முப்பெரும் விழா இனிதே நிறைவேறியது.
- (விழாவின் சொற்பொழிவுகளின் சுருக்கத்தை அடுத்துக் காணலாம்)

# 8

# விழாவில் கிடைத்த முத்துக்கள்

---

- தமிழக அரசு 1982ல் திருச்சியில் நடத்திய விழ வில், அமைச்சர்கள், ஆளுநர், சட்டப் பேரவை தலைவர், மேலவைத் தலைவர் ஆகியோர் நிகழ்த்திய உரைச் சுருக்கம்.
- உரை சுருக்கமானலும் மறைந்து விடாமலும், மறந்து போகாமலும் பாவேந்தரை நினைத்துப் பெருமைப் படுவதற்கு உரியது.
- உதவியவர் புலவர் தமிழ்ப்பித்தன் அவர்கள்.

''இந்தப் பல்கலைக் கழகம் இந்த நூற்றுண்டில் தோன்றிய மிகப் பெரிய கவிஞர்-அருஞ்சிந்தனை யாளர்-செயல் வீரர்-பாரதிதாசனின் பெயரைத் தக்க வகையிலே சூட்டிக் கொண்டிருக்கிறது.

''புதிய பல்கலைக் கழகமாம் பாரதிதாசன் பல்கலைக் கழகம் உயர் கல்விக்கும் நிலைத்த பணி களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பை உருவாக்கி புதிய களத்தை அமைக்கும். எல்லா ஆடவர்களும் பெண்களும் நல்லவர்களாக இருக்கும் வாய்ப்பைப் பெற்று, திருப்தியுடன், அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ்வதற்கு வலிமை யையும் முன்னேற்றத்தையும் வழங்க, புதிய சமுதாயத்தை உருவாக்குவதில் நமது நாடு எதிர் கொள்ளும் பிரச்னைகளுக்கு இந்தப் பல்கலைக் கழகம் வழிகாணும்''

**—மேதகு ஆளுநர் சாதிக் அலி அவர்கள்**

''இங்கு பாவேந்தர் பாரதிதாசன், பாரதியார் இருவரின் உருவப்படங்களும் திறக்கப்பட்டன. யாருக்குப் பாராட்டுக் கூறுகிறோம் என்று சொல்வதை விட யாருக்கு நாம் வணக்கம் செலுத்துகிறோம் என்று நினைத்தால் எதிர் காலத்திற்கு நன்மை கிடைக்கும்.''

ஃ ஃ ஃ

''பாரதியும் பாரதிதாசனும் யாருக்குச் சொந்தம்? தமிழ் நாட்டுக்கு மட்டுமா? இந்தியாவுக்கு மட்டுமா? உலகத் திற்கே சொந்தம்! வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர், வாழிய பாரத மணித்திருநாடு என்று சொல்லிச் சென்றார் பாரதி. அவர் வாழ்ந்த திருநாடு இது என்கிறோம்''

ஃ ஃ ஃ

''இளைஞர்கள் அனைவரும் ஜாதி வேற்றுமைகளைக் களையும்படி சொன்னார் பாரதி. அதைத் தொடர்ந்து சொன்னார் பாரதிதாசன்''

"பாவேந்தர் பல்கலைக் கழகம் தமிழக மக்களின் ஆசியுடன் இன்று தொடங்கப்படுகிறது. ஒரு குழந்தையைப் பெற்றெடுக்க, தாய் என்னென்ன சிரமப்படுவாளோ அதே போல, தமிழக அரசு, தமிழக மக்களின் ஆதரவில் தொல்லைகளை எல்லாம் மறந்து இதுபோன்ற நல்ல நிகழ்ச்சிகளை நிறைவேற்றி வருகிறது. நேற்றும் இன்றும் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளைக் கண்டு மக்கள் என்ன நினைப்பார்கள் என்று என்னால் நிச்சயமாக எண்ணிப் பார்க்க முடிகிறது. நாட்டுக்கு என்னென்ன பயனுள்ள பணிகளைச் செய்ய வேண்டுமோ இவற்றைச் செய்கிறோம் என்பதைத் தமிழக மக்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள்"

**—மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர்**
**எம். ஜி. ஆர். அவர்கள்**

ஃ ஃ ஃ

"பாரதியானாலும் பாரதிதாசன் ஆனாலும் அவர்கள் இருவரும் மதத்தை-சாதியைச் சாடினார்கள். சமுதாயத்தை எவை எவை கெடுத்தனவோ அவற்றை எல்லாம் சாடினார்கள்.

"பாரதி தேசியக்கவி, பாரதிதாசன் தன்மானக் கவி. இவர்கள் இருவரும் தமிழை மறக்கவில்லை. தமிழை எப்படி எல்லாம் வளர்க்க வேண்டும் என்று கூறினார் பாவேந்தர். தமிழனின் மேன்மையை இகழ்ந்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன்" என்று கூறினார்."

**—மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்**
**எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள்**

ஃ ஃ ஃ

"ஒரு மாநிலத்தின் வளர்ச்சியைக் கல்வியிலிருந்து உலகு கணக்குப் போடுகிறது. ஆராய்ச்சி அறிவுமிக்க

பல்கலைக் கழகம் எத்தனை ஒரு மாநிலத்தில் தோன்று கிறதோ, அப்போதுதான் அந்த மாநிலம் பெருமை பெறும் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

''தாய் எட்டடி என்றால் குட்டி பதினாறு அடி என்ற முறையில் பாரதியும் பாவேந்தரும் வாழ்ந்து காட்டி மறைந்தனர்.

1977-ம் ஆண்டுக்குப் பின்பு புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னர்தான் பாவேந்தருக்கு அரசின் சார்பில் விழா எடுக்கப்பட்டு நாட்டு மக்களுக்கு அவரை நினைவுபடுத்தும் நல்லபணி தொடரப்படுகிறது''

**–மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர்**
**இராம. வீரப்பன் அவர்கள்**

ஃ ஃ ஃ

''வெள்ளை உள்ளம்-வீர வாசகம்-கண்ணில் ஒளி வீச்சு-மொழிப்பற்று ஆகிய அரும் பேறுகள் கொண்டவர் கவிஞர் பாரதிதாசன்.

''வடமொழியின் ஆதிக்கத்தை அவர் வெறுத்தவர். ஆனால் வடமொழிக் காவியமான பில்ஹணனை எடுத்து, ''புரட்சிக் கவி'' என்னும் காவியமாக அவர் பாடினார். சிறந்த கவிஞனுக்கு மொழி வேற்றுமை கிடையாது என்னும் தத்துவத்தை அவர் எடுத்துக் காட்டினார்.

''சமுதாயத்தின் குறைகளை—சமுதாயத்தில் உள்ள கொடுமைகளை அவர் கவிதையில் வடித்துத் தந்திருக்கிறார்.

'எல்லார்க்கும் எல்லாம் என்று இருப்பதான இடம் நோக்கி நடக்கின்றது இந்த வையம்' என்று கூறினார் பாரதிதாசன்''

ஃ ஃ ஃ

''ஆங்கிலத்தை மீடியமாகக் கொள்ளாத பெரும் புலவர்கள் இருவரின் பெயரால் பல்கலைக் கழகங்கள் தொடங்கப் பெறுவது மிகவும் மகிழ்ச்சியான செய்தியாகும். பல்வேறு வகையில் இந்தியாவுக்கே வழிகாட்டும் ஆற்றல் தமிழ்நாட்டுக்கு இருந்து வருகிறது. அதில் இதுவும் ஒன்று.

''பாவேந்தர் பாரதிதாசன் இதயத்திலிருந்து பேசுபவர். பாரதிதாசனைப் போன்ற மகாகவிகள், பாரதியைப் போன்ற மகாகவிகள் இந்தப் பல்கலைக் கழகத்தில் தோன்ற வேண்டும்.''

**—மாண்புமிகு மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர்**
**டாக்டர் ம. பொ. சி. அவர்கள்**

ஃ ஃ ஃ

''கவிதை என்பது இன்ப ரசாயனம், இதய விஞ்ஞானம். உதய மெய்ஞானம் என்று சொல்வார்கள்.

''புரட்சிக் கவிஞரின் கவிதைப் பார்வை பீடும் பெருமையும் கொண்டது. அவர் எளிய நடையில் கவிதைகளை எழுதினார். இரும்பைத் தங்கமாக மாற்றுவது போல், கவிதை வரிகளில் ஒளியை ஏற்றினார். சமுதாயத்தின் மாசு போக்க வேண்டும் என்பது அவரது கொள்கை.

''தமிழகத்தின் முதல் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஆவார். அவரது பாடல்கள் படைக்கலங்களாகக் கை கொடுக்கின்றன.''

**—மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்**
**டாக்டர் காளிமுத்து அவர்கள்**

ஃ ஃ ஃ

''இதுவரை பல்கலைக் கழகத் தொடர்பான விழா படித்தவர்களிடையே மட்டுமே இருந்து வந்தது. அந்த

நிலையை மாற்றி, பொதுமக்கள் லட்சக் கணக்கில் திரண்டு வரும் வகையில் செய்திருப்பது புரட்சித் தலைவர் அவர்களின் சாதனையாகும்.

பாரதிதாசன் பல்கலைக் கழகம் பல பிரச்சினைகளை ஆய்வு செய்து பலன் காண வேண்டும். சின்னத்தில் உள்ளதுபோல் புதியதோர் உலகு செய்வோம்-என்ற வகையில் அதன் பணி அமைய வேண்டும்.

**—மாண்புமிகு கல்வி அமைச்சர் அரங்க நாயகம் அவர்கள்**

ஃ ஃ ஃ

இரண்டாயிரம் ஆண்டுகளாக மக்களைப் பற்றி அக்கறை கொள்ளாத கவிஞர்களின் மத்தியில் மக்களைப் பற்றி அக்கறை கொண்டவர் பாரதிதாசன்; அவர் புதுயுகக் கவிஞர்.

பல நாடுகளில் புரட்சிக் கருத்துக்களைச் சொல்லியதற்காகக் கவிஞர்கள் துரத்தியடிக்கப்பட்டிருக்கிறார்கள். சில நாடுகளில் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அனைவரும் ஒன்று சேர்ந்து, ஒரு கவிஞரைப் பாராட்டும் அரிய நிலைமையை முதன் முதலில் செய்துள்ளது தமிழ்நாடுதான் என்று கூறலாம்.

**—மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்**
**கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள்**

ஃ ஃ ஃ

“அடிமை விலங்கொடித்த வீரராக இந்திய நாட்டின் விடிவெள்ளியாக பாரதி தோன்றினார். கற்பனை நயத்துடன் உண்மைகளைக் கவிதை வடிவாக்கினார். சமுதாயத்தில் புரையோடிப் போயிருந்த கொள்ளை நோய்களுக்கு அவரது பாடல்கள் மருந்தாக விளங்கியது.

''அவரது பாடல்கள் புதிய தெம்பையும் புத்துணர்ச்சியையும் அச்சமின்மையையும் அனைவருக்கும் ஏற்படுத்தின. மனித சமுதாயம் கைக்கொள்ள வேண்டிய நல்ல சிந்தனைகள் அவரது கவிதைகளில் காணப்படுகின்றன''

-மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்
திருநாவுக்கரசு அவர்கள்

ஃ ஃ ஃ

''கல்வித் துறையில் பணத்தைச் செலவிடுவதன் வாயிலாக பொது அறிவை வளர்க்க முடிகிறது. இந்த ஆண்டு கல்விச் செலவுக்காக ரூ 318 கோடியை தமிழக அரசு ஒதுக்கியுள்ளது. பிற நாடுகளோடு அறைகூவி நிற்க வேண்டும் என்ற எண்ணம்தான் கல்விக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்வதற்குரிய காரணம்.

''அறிவை எது எது கெடுக்கின்றதோ அதை எல்லாம் நீக்கி, நாடு முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற கருத்தை எடுத்துச் சொல்வதற்காகப் பாவேந்தர் கவி பாடினார்''

-மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர்
நெடுஞ்செழியன் அவர்கள்

ஃ ஃ ஃ

''பாரதி ஜாதியற்ற சமுதாயத்தைக் காண விரும்பியிருக்கிறார். சுதந்திர தாகம்-சுதந்திர சங்கநாதம் இந்தியத் துணைக் கண்டத்தில் பல பகுதிகளில் ஒலிக்காமல் இருந்த நேரத்தில் சுதந்திர முழக்கமிட்டவர் பாரதியார்.

புரட்சிக் காரியங்கள் பலவற்றை அவர் ஆற்றியிருக்கிறார். அதன் காரணமாக ஒருமுறை தமது மாமனாரின் ஊரான கடையத்தை விட்டு அவர் வெளியேற்றப்பட்டார். அப்படி வெறுக்கப்பட்ட கவிஞரின்-ஒதுக்கப்பட்ட கவிஞரின் உருவப்படம் இன்று திறக்கப்படுவது பாராட்டுக்கு உரியது''

—மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் ராஜாராம் அவர்கள்

''பாரதிக்கு எத்தனையோ சீடர்கள் கிடைத்திருக்கலாம்; ஒரு பாரதிதாசன் அவருக்குச் சீடராகக் கிடைத்தது தான் அவரது பெருமையை உலகுக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறது.

''நாட்டு விடுதலைக்குக் கவி பாடினார் பாரதி; சமுதாய விடுதலைக்குக் கவி பாடினார் பாரதிதாசன். கவிஞர்கள் என்றதும் அவர்கள் கற்பனைக்கு ஆட்பட்டவர்கள் என்று தான் எண்ணுகிறோம். பாவேந்தர் கற்பனையில் மூழ்கி விடவில்லை. அவர் ஒரு 'கமாண்டர்-இன்சீப்' போல், 'இப்படி இருந்தால் நீ ஏற்றம் பெறுவாய்' என்று எடுத்துச் சொன்னார்''

**—சட்டமன்ற உறுப்பினர் ஆர். சௌந்திரராஜன் அவர்கள்**

ஃ ஃ ஃ

''பொன்னுக்குப் பாடிய கவிஞர் உண்டு; கூழுக்குப் பாடிய கவிஞர் உண்டு. அவர்கள் மத்தியில் கொள்கைக்குப் பாடிய கவிஞர் என்பதால் பாரதிதாசன் சிறந்தவராகத் திகழ்கிறார்.

மக்களைப் பாடிய கவிஞர் பாரதியும் பாரதிதாசனும் ஆவார்கள். என்றாலும் சில இடங்களில் குருவுக்கு விஞ்சிய சீடராக பாரதிதாசன் விளங்குகிறார்''

**—மாண்புமிகு மின்துறை அமைச்சர் இராமச்சந்திரன் அவர்கள்**

# 9

# பாவேந்தரின் புத்தாண்டு வாழ்த்து

---

- ☐ சென்னையில் 1943ல் பெரிய அச்சகம் ஒன்றில் திரு- முல்லை முத்தையா பணியாற்றிக் கொண் டிருந்தார்.

- ☐ அப்பொழுது, தமிழ்ப் புத்தாண்டான சுபானு ஆண்டுக்கு (1943) புத்தாண்டு வாழ்த்து' அச்சிட்டு வழங்கக் கருதினார்.

- ☐ பாவேந்தர் அவர்களிடம் கவிதை வேண்டிக் கடிதம் எழுதினார் முல்லை முத்தையா.

- ☐ பாவேந்தரிடமிருந்து மறு தபாலில் கவிதை ஒன்று வந்தது. அதை அச்சிட்டு வழங்கினார் முல்லை முத்தையா.

- ☐ அந்தக் கவிதை எப்படியோ, எங்கிருந்தோ இப்பொழுது அகப்பட்டது.
- ☐ அந்தக் கவிதை இதுவரை எந்தப் பத்திரிகையிலும், எந்த நூலிலும் வெளி வந்தது இல்லை.
- ☐ அத்தகைய சிறப்புமிக்க கவிதை அளவற்ற மகிழ்ச்சியோடு இங்கே வெளியிடப்படுகிறது.

ஃ ஃ ஃ

**முந்நூற் றறுபதுன் முத்துச் சிலம்படி**
**ஒவ்வொன்ருக ஊன்றி, நீ "உமக்குச்**
**செம்மை! செம்மை செம்மை" என்று**
**நடந்து வா எம்மனோர் நல்வாழ்வு**
**தொடங்கும் வண்ணம் துயோய் வாழியே!**

—பாரதிதாசன்

# 10

# பொது உடைமையும் புரட்சிக் கவிஞரும்

பேராசிரியர் ந. இராமநாதன்

- பேராசிரியர் இராமநாதன் அவர்கள் பாவேந்தரோடு நெருங்கிப் பழகியவர். பாவேந்தர் கவிதைகளில் ஊறித் திளைத்தவர்.
- பெரியார் அஞ்சல் வழிக் கல்லூரியின் முதல்வராக இருக்கின்றார்.
- பெரியார் திடலில் நிகழ்ந்த புரட்சிக் கவிஞர் விழாவில் பேராசிரியர் பேசியதன் சுருக்கம்.
- 'விடுதலை' இதழில் வெளிவந்தது. அனுமதியுடன் வெளியிடப்படுகிறது.

பொதுவுடைமை என்ற கருத்து தமிழ் இலக்கிய உலகுக்குப் புதுமையான ஒன்று. இந்தப் புதிய கருத்தை அறிவியல் நோக்கில் முறையாகப் பல கோணங்களில் இலக்கிய நலம் செறியப் பாடிய சிறப்பு மிக்க ஒரே கவிஞர் புரட்சிக் கவிஞர்தான்.

மனிதன் அனுபவிக்கும் எந்தப் பொருளுக்கும் நாம் கொடுக்கும் விலை மனித உழைப்புக்குத்தான் என்பதை அறிய வேண்டும். உண்மையில் உழைப்பவனுக்குத்தான் உழைப்பின் பயனாகிய ஊதியம் போய்ச் சேர வேண்டும். உலக நடை முறையில் அவ்வாறு இல்லாமல் உழைப்பவன் பசியால் வாடுகின்றான்.

உழைக்காதவன் வளமாக உண்டு உடுத்து வாழ்கின்றான். இந்த நிலை நாட்டு நடை முறையாக வந்தால் இதனை மாற்றி எல்லோரும் உழைக்க வேண்டும் என்பதும், அவ்வாறு உழைப்பவருக்கு எல்லா வகையான வாய்ப்புக்களும், நலங்களும் ஒத்த அளவில் கிடைக்க வேண்டும் என்பதும், குறிக்கோளாக வைத்து உருவாக்கப்பட்டது தான் பொதுவுடைமைக் கொள்கை.

ஆகவே, பொதுவுடைமை என்று சொல்லும் போது தொழிலாளர்-தொழிலாளர் நிலை முதலாளிகள்-ஆளுவோர் இவர்களின் அடா போக்கு இவையெல்லாவற்றையும் திறம்பட, உள்ளது உள்ளபடியே பாடுவதன் வாயிலாக பொதுவுடைம என்ற குறிக்கோளை நோக்கி உலகைச் செல்லத் தூண்டுவதும் பொதுவுடைமையைப் பாடியதாக அமையும்.

இதுதான் அறிவியலோடு பொதுவுடைமைக் கொள்கை அணுகும் முறையாகும்.

புரட்சிக் கவிஞர் நேர்முகமாகவும் பொதுவுடைமையைப் பாடியுள்ளார்.

தொழிலாளர் - உழைப்பு - இவைகளைப் பாடுவதன் வாயிலாகவும் பொதுவுடமையைப் பாடுகின்றார்.

பொதுவுடமைக் கொள்கை
திசை யெட்டும்
புனிதமோ டதை யெங்கள்
உயிரென்று காப்போம்

இப்பாட்டடிகளில் நேர்முகமாகப் பொதுவுடமையைப் பாடுகின்றார்.

இவ்வடிகளில் பொதுவுடைமைக் கொள்கையை ஒரு நாட்டில் கடைப்பிடித்தால் போதாது. உலகமே பொது வுடமை உடையதாக ஆக வேண்டும் என்று கவிஞர் விரும்புகின்றார்.

''திசை யெட்டும் சேர்ப்போம்'' என்றால் உலகம் முழுவதுக்கும் பொதுவுடமைக் கொள்கையைச் சேர்ப்போம் என்று கருத்தாகின்றது.

எட்டுத் திசையையும் தாண்டி அப்பால் உலகு இல்லை.

ஒரு கொள்கையைச் சேர்த்தால் மட்டும் போதாது.. அதனைக் காக்கவும் வேண்டும். காத்தற்கு அடிப்படையாக இருப்பது இக்கொள்கை. புனிதமானது அல்லது தூய்மை யானது என்ற எண்ணம் வேண்டும். அந்த எண்ணத்தோடு திசையெட்டும் சேர்த்துக் காப்போம்—இவ்வாறு பாடி யுள்ளது எவ்வளவு திடமாக வரையறையோடு இருக் கின்றது என்பதைப் பாருங்கள்.

பொதுவுடமை உள்ள உலகில் சண்டைக்கு வழி இல்லை இக் கருத்தை வைத்துத்தான்—

**புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட**
**போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்.**

*என்று பாடுகின்றார்.*

*போர் இல்லாத அமைதி உலகத்தை உருவாக்க எண்ணு கின்றார் கவிஞர். ஆனால் இப்பாடலை பாடிய காலத்தில் உலகில் ஆட்சி என்றால் அது போர் இல்லாமல் இருக்க முடியாது என்றுதான் இருந்தது.*

# 11

# வள்ளல் பாவேந்தன்

டாக்டர். இரா. இளவரசு

- பேச்சும் மூச்சும் தமிழாகவே வாழும் பேராசிரியர்.
- பாவேந்தர் கவிதை உலகில் ஒளியாகத் திகழ்பவர்.
- அவர் தம் காதல் துணைவியாரும் தமிழ்ப் பேராசிரியை.
- இருவரும் ஆய்வு எழுதிப் பட்டம் பெற்றவர்கள்.
- 'வள்ளல் பாவேந்தன்' என்னும் இக்கவிதை, 'விடுதலை' என்னும் நூலில் உள்ளது.
- பாவேந்தரின் கவிதை வானில் பறக்க நம்மை அழைத்துச் செல்கிறது இக் கவிதை.
- இக் கவிதையின் சுவை கண்டு எடுத்துத் தந்தவர் பேராசிரியரின் மாணவர் முல்லை. மு.பழநியப்பன்.

வள்ளல் பாவேந்தன் வாரி வழங்கிய
தெள்ளு தமிழ்த் தேன் அள்ளிப் பருகிட
கூடி வாரீர் உலகீர்! —இன்னே!
ஓடி வாரீர் உலகீர்!

இருட்டறை யூடே எழுந்த செஞ் ஞாயிறு!
ஏங்கும் பயிர்க்கென இழிதரு வான் மழை
புரட்டரை வேரொடு புரட்டும் மறப்புயல்!
பூவினும் மென்மனப் புதுவைத் தென்றல் (வள்ளல்)

அரிமா நோக்கு; ஆணை யிடுங்குரல்;
ஆண்ட எந்தமிழ் அரியணை நெஞ்சம்.
விரிமா நிலத்தில் எவர்க்கும் அஞ்சா
வேங்கை; புரட்சிப் பூங்கா வான (வள்ளல்)

சாதி நெருப்பினைத் தகர்க்கும் நிலைகடல்!
சமயப் புளுகினைப் பொசுக்கும் எரிமலை!
பாதியிற் புகுந்த பழிதரு கொள்கைகள்
பஞ்சாய்ப் பறந்திடப் பகுத்தறி வூட்டிய (வள்ளல்)

அச்சம் பறக்கும், ஆண்மை சுரக்கும்,
ஆமையும் முழங்கு அரிமா ஆகலாம்,
உச்சி வானிடி மார்பினில் ஏற்கலாம்,
ஒவ்வொரு பாடலும் வரிப்புலி உறுமல்! (வள்ளல்)

இருண்ட வீட்டில் இருக்கின்றீரா?
எடுத்துக் கொள்க குடும்ப விளக்கை!
மருண்ட நெஞ்சர் சஞ்சீவிச் சாரல்
வஞ்சியின் பேச்சில் நெஞ்சந் திளைக்க! (வள்ளல்)

சிரித்தறி யாதார் அழகின் சிரிப்பைத்
திறந்தாற் போதும் தீர்ந்திடும் துன்பம்;
உரித்த செவ் வாழை உயர்சுவைக் காதல்
ஒவ்வொரு நூலிலும் உமை வரவேற்கும் (வள்ளல்)

பாண்டியன் பரிசு வேண்டுமா? வருக!
பைந்தமி ழியக்கப் பாசறை புகுக!
ஈண்டென் அழைப்பினை ஏற்றுவந் தீரேல்
எதிர் பாராத முத்தமுங் கிடைக்கும். (வள்ளல்)

அள்ளும் நகைச்சுவை நாடகங் காணலாம்;
ஆடை நனையாமல் அருவியிற் குளிக்கலாம்;
பிள்ளைகட் கான பாடலும் உண்டே!
பெற்ற மகாரொடு சுற்றமுஞ் சூழ (வள்ளல்)

# 12

# புரட்சிக்கவிஞர் விழா

திராவிடர் கழக இலக்கிய அணி, புரட்சிக்கவிஞருக்கு மூன்று நாள் விழா பெரியார் திடலில் 1982-இல் சிறப்பாகக் கொண்டாடியது.

புரட்சிக்கவிஞர் பற்றிய எழுச்சிப்பாக்களை, விழாவின் தொடக்கத்தில், இலம்போதர பாகவதர் இன்னிசையுடன் பாடினர்.

தலைமைக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் துரைசாமி வரவேற்புரை நிகழ்த்தினர்.

கவியரசர் பொன்னிவளவன் தலைமையில், தமிழ் இனக் கவிஞர்களின் கவியரங்கம் நடைபெற்றது.

புதுக்கோட்டை கவிதைப்பித்தன், கூ. வ. எழிலரசன், குடிஅரசு ஆகியோர் கவிதை பாடினர்கள்.

புரட்சிக்கவிஞரோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த அறிஞர் பெருமக்கள் முல்லை முத்தையா, நாமக்கல் செல்லப்பனர், பேராசிரியர் இராமநாதன் ஆகியோருக்கு திராவிடர் கழகத்தின் சார்பில் கலைஞர் அவர்கள் சால்வை அணிவித்துப் பாராட்டுகளைத் தெரிவித்தார்.

பொதுச் செயலாளர் தளபதி வீரமணி அவர்கள் சிறப்புரை ஆற்றினர்.

இறுதியில் கலைஞர் அவர்கள் எழுச்சிமிக்க பேருரையாற்றினர்.

## 13

# அழகின் சிரிப்பு!

**—புதுமைப்பித்தன்**

☐ *திரு. முல்லை முத்தையா அவர்கள் பாவேந்தர் நூல்களை மட்டும் வெளியிடுவதற்காக முல்லைப் பதிப்பகத்தைத் தொடங்கி, முதலில் வெளியிட்ட நூல் 'அழகின் சிரிப்பு'*

☐ *'அழகின் சிரிப்பு' என்னும் சிறந்த நூலுக்கு 1944-இல் 'தினசரி' பத்திரிகையில், மறுமலர்ச்சி எழுத்தாளர்களிலே தலைசிறந்த புதுமைப்பித்தன் மதிப்புரை எழுதினார். சிறப்பு மிக்க மதிப்புரை இங்கே வெளியிடப்படுகிறது.*

## தமிழ்நாட்டின் பாரதீய பரம்பரை
## அதன் ஏகப்பிரதிநிதி பாரதிதாசனே !

ஆயிரம் உண்டிங்கு ஜாதி - எனில் அந்நியர் வந்து புகல் என்ன நீதி'' என்று அதட்டிக் கேட்ட குரல் ஒடுங்கி சுமார் இருபது வருடங்கள் கழித்த பிறகு, பாரதிய பரம்பரை ஒன்று இருப்பதாகத் தெரிவித்துக் கொள்ளப்பட்டது. பாரதீய பரம்பரை என்று காவியத்துறையில் இருப்பதை ஒப்புக் கொள்வது. அவசியமாயின், அதன் ஏகப்பிரதிநிதி பாரதிதாசனே என்பதற்கு முல்லைப் பதிப்பக வெளியீடான 'அழகின் சிரிப்பு' ஓர் அத்தாட்சி.

ஆற்றொழுக்குப் போன்ற நடை, சிற்றோடையின் ஆழமும், வேகமும், தெளிவும் பெற்ற கற்பனை. யாரையும் சட்டை செய்யா, எவருக்கும் பணியாத கருத்தமைதி- இவைதான் பாரதிதாசன்.

**திருவிளக்கிற் சிரிக்கின்றாள்**
**நா ரெடுத்து**
**நறுமலரைத் தொடுப்பவளின்**
**விரல் வளைவில்**
**நாடகத்தைச் செய்கின்றாள்;**
**அடடே, செந்தோள்**
**புறத்தினிலே கலப் பையுடன்**
**உழவன் செல்லும்**
**புது நடையில் பூரிக்கின்றாள்.**

என வர்ணிக்கப்படும் அழகுத் தெய்வத்தின் பாதாதி கேசம் இப்பாடல் தொகுதி என்று சொன்னால் முழுதும் பொருந்தும்......

ஒரே நிலையில், ஒரே அமைதியுடன், கவித்துவ சக்தி தள்ளாடாமல் செல்லும் பாட்டுத் தொகுதி இந்த 'அழகின் சிரிப்பு'

இந்தத் தொகுதியில் 'தாசன்' ஒரு புதிய சம்பிர தாயத்தைப் புகுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. பொது வாக இது வரை பாடல்களில், பெண்கள் அல்லது அரசர்கள் ஆகியோருக்கே உலகின் அழகுச் சுமைகளை யெல்லாம் காணிக்கையாக வைத்து வழுத்துவது மரபு. இங்கு இவர், தம் கற்றுச் சொல்லியிடம் உலகின் அழகுகளை எடுத்துக் காட்டி வருவது போலவே பாடல்கள் அமைக்கப் பட்டுள்ளன. இதுவரை இல்லாத புது சம்பிரதாயம் இது.

# 14

# புரட்சிக் கவிஞர்

□ பாவேந்தரைப் பற்றி முதன் முதலில் வெளியிடப் பெற்ற நூலின் நான்காம் பதிப்பிற்கான பதிப்புரை.

தமிழ் இலக்கிய உலகில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களைப் பற்றி அறியாதவர் இரார். படிப்போர் சிந்தனைக்கு வேலை தந்து, புதிய கருத்துகளையும் புரட்சிக் கருத்துக்களையும் தம் கவிதைகள் மூலம், அதன் காரண மாகப் பாரதிதாசன் பரம்பரை என ஒரு பரம்பரையும் தோற்றுவித்த பெருமைக்குரியவர் பாரதிதாசன் அவர் களாவார்.

பாரதிதாசன் கவிதைகளையும், அவர் தம் வரலாற்றினை யும் மக்கள் அறியாதிருந்த காலத்தில், அவற்றை மக்கள் மன்றத்திற்கு அறிமுகப்படுத்திய பெருமை இந் நூலின் தொகுப்பாசிரியர், முல்லை முத்தையா எனச் சிறப்பு பெயரால் அழைக்கப் பெறும் திரு. ப. முத்தையா அவர் களையே சேரும்.

இத் தொகுப்பில் பாரதிதாசனைப் பற்றிப் பல்வேறு துறைகளிலுள்ள அறிஞர் பெருமக்களின் கருத்துரைகள் நன்கு தொகுத்துத் தரப்பட்டுள்ளன. இவற்றைப் படிப் போர் புரட்சிக் கவிஞரின் கவிதைகளை மேலும் பயிலும் ஆர்வம் பெறுவர் என்பது திண்ணம்.

திரு. முத்தையா அவர்களின் அரிய முயற்சியால் **1946**இல் சென்னைக் கமலா பிரசுராலயத்தாரால் இதன் முதற் பதிப்பு வெளிக் கொணரப்பட்டது. அடுத்து முறையே **1948, 53**,ஆம் ஆண்டுகளில் இரண்டு பதிப்புகள் வெளி வந்தன. இந் நான்காம் பதிப்பு கழக வெளியீடாக வெளி வருகின்றது. தமிழ் அன்பர்கள் இதனை ஏற்றுப் போற்று வார்கள் என்று நம்புகிறோம்.

**—சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தார்**

# 15

# பாவேந்தர் கடிதம்

---

- ☐ பாவேந்தர் மகன் மன்னர் மன்னனுக்கு 26-6-1955இல், புதுவையில், தேசபக்தர், கதர் நிபுணர் கோவை அய்யாமுத்து அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெற்றது.
- ☐ திருமணத்துக்கு வருமாறு அய்யாமுத்துவுக்குப் பாவேந்தர் கடிதம் எழுதினார். அதை ஒப்புக்கொண்டு அவர் தந்தி கொடுத்தார். அந்த தந்தியைப் பெற்றுக்கொண்டு, பாவேந்தர், அய்யாமுத்துவுக்குக் கடிதம் எழுதினார்.
- ☐ பாவேந்தர் எழுதிய அந்தக் கடிதம் இங்கே வெளியிடப்படுகிறது.

அன்பார்ந்த அய்யாமுத்து அவர்கட்கு.

நலம்.

அன்பு கனிந்த தந்தி கிடைத்தது.

திரு. பன்மொழிப் புலவர் தேவநேயப் பாவாணருக்கும் ஆசிரியர் பொன்னம்பலனூர்க்கும் மணியார்டர் அனுப்பியுள்ளேன். உங்கட்கு மணியார்டர் அனுப்பவில்லை. அனுப்பினால் நீங்கள் வருந்துவீர்கள் என்று உங்கள் மகள்-என் மகள் சரசுவதி சொன்னாள்.

வரவும் போகவும் ஆகும் செலவுக்கு நான் பொறுப்பாளி. ஆனதால் அன்புள்ளவரே, ஒரு நாள் முன்னதாகவே புதுவைக்குக் கட்டாயமாக வந்துவிட வேண்டும், பல சங்கதிகளை உத்தேசித்து இதைச் சொல்லுகிறேன். உங்கள் மனைவியார்-என் தங்கையாரையும் அழைத்து வர வேண்டும். இந்த விஷயத்தில் தயவு செய்து அயோக்கியத்தனமாக நடந்து கொள்ளமாட்டீர்கள் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். உடனே அப்படியே ஆகட்டும் என்று தந்தி கொடுக்கவும்.

தங்கள் கீழ்ப்படிதலுள்ள,

**பாரதிதாசன்**

18-6-55.

# 16

# தமிழ் அன்பர் கடிதம்

இரா. பாவாணன்

- ☐ பாவாணன் அவர்கள் கல்லூரியில் பயின்றவர். அப்போதே தனித்தமிழ்ப் பற்றும், சீர்திருத்தக் கொள்கையும் கொண்டவர்.
- ☐ துணிவு மிக்க இளைஞர்
- ☐ பேச்சிலும் வல்லவர்
- ☐ பெருஞ் சித்திரனார் நூல்களை வெளியிட்டவர்.
- ☐ புதுக்கோட்டையில் தொழிற்சாலை நடத்திக் கொண்டிருக்கிறார்.
- ☐ அரசியல் ஈடுபாடு உடையவர்.
- ☐ பாவாணன் இளம் அறிவியல் பட்டதாரி.

அன்புத் திரு முல்லை முத்தையா அவர்கட்கு,

நலம். தங்கள் நலத்திலும் இல்லத்தார் நலத்திலும் பெரிதும் நாட்டம்.

தாங்கள் நட்புடன் விடுத்த அறுசுவை விருந்து பெற்றேன். ஏற்கனவே "குமுதம்" இதழில் வெளியீடு பற்றி அறிந்தேன். நேரில் வந்து பெற்றுக் கொள்ள எண்ணி இருந்தேன். பாவேந்தரை அறிமுகப்படுத்த அரிய முயற்சிகளை மேற்கொண்டவர் என ஏற்கனவே அறிவேன். ஆயினும் இந்நூல் மூலமே அவரைத் தாங்கள் தமிழறிஞர் அனைவருக்கும் அறிமுகம் செய்தவர் என்கிற பெருமைக்குரிய செய்தியை தெரிந்து கொண்டேன்.

நூல் வெளியீட்டில் குறையாத ஆர்வம் உடையவன் நான். ஆயினும், சென்னையில் தங்களுடன் இதுபற்றிப் பேச இயலாது போய்விட்டது.

வணிகங் கருதி வருவதாலும் தொடர் அலுவல்கள் இருந்து வருவதாலும் இவ்வாறு நேர்ந்தது. இனி வரும் போது ஓரிரு நாள் கூடுதலாகத் தங்கியேனும் தங்கள் பட்டறிவைக் கேட்பேன்.

பிற நேரில்.

தங்கள்

**இரா. பாவாணன்**

# 17

# பாரதியாரா? பாரதிதாசனா?

**வலம்புரி ஜான்**

- கவர்ச்சி மிக்க - கருத்தாழம் நிறைந்த இனிய தமிழ் நடையால் பல்லாயிரம் தமிழ் வாசகர்களைக் கவர்ந்தவர் வலம்புரி ஜான்.
- சொற்பொழிவிலும் தமக்கென தனி இடத்தைப் பெற்றவர்.
- டில்லி ராஜ்யசபை உறுப்பினர்.
- சிறப்பு மிக்க 'தாய்' ஆசிரியர்.
- பட்டி மன்றக் கருத்தையும் சாடுகிறார்.
- இங்கே காணப்படுவது 'தாய்' இதழில் வெளி வந்த ஆசிரியர் குறிப்பு.

பாரதியார் உயர்ந்தவரா? பாரதிதாசன் உயர்ந்தவரா? என்றெல்லாம் கூட இப்பொழுது பட்டிமன்றம் நடக்கிறது. பாரதிதாசனை உயர்த்திக் காட்டுவதற்காகப் பாரதியாரைச் சிலர் குள்ளமாக்குகிறார்கள்.

நாம் போற்றுகிற பாரதிதாசனே 'நீடு துயில் நீக்கப் பாடி வந்த நிலா' என்று பாரதியாரைக் குறிப்பிட்டிருக்கிறார். இது தெரியாதா என்றும் பெரியவர்கள் சிலர் கேட்பார்கள். இது மாதிரி வரிகளை நமது வசதிக்காக நினைத்துக் கொள்கிறோம். தேவைப் படுகிற போது மறந்து விடுகிறோம்.

1974 ஆகஸ்டில் பாண்டிச்சேரியில் அப்போது வருவதாக இருந்த [இப்போதும் வந்து சேராத] பல்கலைக் கழகத்திற்குப் 'பாரதிதாசன் பல்கலைக் கழகம்' என்று பெயரிட வேண்டும் என்று நானும் குரல் கொடுத்தேன். உமா சங்கர் ஜோஷி போன்ற அறிவாளர்களே கூட அப்போதைக்கு அதை எதிர்த்தார்கள். இருந்தாலும் கால தேவனின் கட்டளை புரட்சித் தலைவருக்கே அந்த வரலாற்று வாய்ப்பும் வந்து சேர்ந்திருக்கிறது.

நினைவில் நிற்கிற நாளந்தா பல்கலைக் கழகத்தைப் போல, பாரதிதாசன் பல்கலைக் கழகம் நெஞ்சில் நிறைந்திட நினைத்ததை முடிப்பவரை வணங்கி வாழ்த்துகிறோம்.

# 18

# பாவேந்தர் ஒரு உலகக் கவிஞர்

**சிலம்பொலி செல்லப்பன்**

- *தமிழ் அறிந்தோர் சிலம்பொலியின் சொற்பொழிவைப் பருகாதவர்களும், எழுத்தைப் படிக்காதவர்களும் இருக்க மாட்டார்கள்.*
- *'சிலம்பொலி' என்றால் செல்லப்பனார். செல்லப்பனார் என்றால் சிலம்பொலியே நினைவுக்கு வரும்.*
- *பாவேந்தர் கவிதைக் கடலில் மட்டும் அல்லாமல், தமிழ் இலக்கிய வானிலும் ஒளியாகத் திகழ்பவர்.*
- *கனிவானவர்; பண்பாடு மிகுந்தவர்; தமிழே உயிராகக் கொண்ட தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர்.*
- *சென்னைப் பல்கலைக் கழகப் பாரதிதாசன் அறக்கட்டளைச் சொற்பொழிவின் ஒரு பகுதி இங்கே தரப்படுகிறது.*

**யாவரும் கேளிர்:—**

பாவேந்தர் தமிழகக் கவிஞர்; ஆயினும் உலக நோக்குக் கொண்டவர். தமிழ்த் தேசியம் பாடியவர்; ஆயினும் பல தேசியங்கள் பகையின்றி இணைந்த உலக தேசியத்தை விரும்பியவர்; தம் மொழி, தம் நாடு, தம் நாட்டு மக்கள், அவர்கள் வாழ்வு, வளம் பற்றியே பாடிய ஒருவர் உலகச் சிந்தனையாளராக உயர முடியுமா என்னும் வினு எழலாம். உயர முடியும். அதுவும் அவரால்தான் முடியும் என்பதே அவ்வினுவிற்கான விடையாம். தன் குழந்தையிடம் பற்று வைத்திருப்பவனுல் தான் பிற குழந்தைகளிடம் பற்றுக் காட்ட முடியும். தன் குழந்தையிடமே பற்றில்லாதவன் பிற குழந்தைகளிடம் பற்றுக் கொள்வது எங்ஙனம்? தன் குழந்தையிடம் பற்று வேண்டும்; ஆனுல் அது மட்டுமேயாக இருந்து விடக் கூடாது. தன்னுரிமைப் பற்று பொது உரிமைப் பற்றுக்கு அடித்தளமாக, படிக்கட்டாக அமைய வேண்டும்.

**உலகப் பார்வை:—**

கவிஞன் தன்னை ஒரு குறுகிய எல்லைக்குள் கட்டுப் படுத்திக் கொள்ளக் கூடாது. அதன் சிந்தனை உலகளா வியதாய் இருக்கவேண்டும், எனும் கொள்கையுடையவர் பாவேந்தர். அவர் பாரதியாரைப் பற்றி

**“பாரதியார் உலக கவி - அகத்தில் அன்பும்**
**பரந்துயர்ந்த அறிவினிலே ஒளியும் [வாய்ந்தோர்;**
**ஓரூருக் கொரு நாட்டுக் குரிய தான**
**ஒட்டைச்சாண் நினைப்புடையவர் [அல்லர்”**

எனச் சொல்வதிலிருந்து இதை நாம் அறியலாம். கவிஞர் பாரதிதாசன் வானவில்லை காண்கிறார். அதன் வண்ணங் களிலே எண்ணத்தைப் பறி கொடுக்கிருர் நொடி தோறும் கரைந்து சிறிது நேரத்தில் வானவில் மறைகிறது இன்பமும், துன்பமும் தோன்றுவதும், மறைவதும் தெரியாது என்

பதை வானம் உலக மக்கட்கு எழுதிக் காட்டுவது போல அக்காட்சி இருக்கிறதாம். இவ்வாறு தத்துவம் கூறும் கவிஞர், வானவில் தோன்றுகின்ற அந்த வானைப் போல மனோபாவம் கவிஞர்களுக்கு இருக்க வேண்டுமென்றும் குறிப்பிடுகிறார்.

"புதுமை இது! வானிடைக் கண்டஅவ் வோவியம்
போய்முகிற் புனலிலே நொடிதோறும் கரைந்ததே!
இதுஅது எனச் சொல்ல ஏலாது ஒழிந்ததே!
இன்பமும் துன்பமும் யாவுமே இவ்வண்ணம்
கதுமெனத் தோன்றிடும் மறைந்திடும் என்பதைக்
கண்ணெதிர்க் காட்டவரும் விண்ணெழுது கவிதையாம்
அது நமக்குத் தெரியும் அன்றியும் கவிஞருளம்
அவ்வான விரிவினும் பெரிதென்ப தறிவமே!"

கவிஞருள்ளம் வானவிரிவினும் பெரியது. குறுந்தொகை: காதலன்பு.

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்ததன்று
நீரினும் ஆரளவின்றே......"

எனக் குறிப்பிடும். அது போலவே கவிஞருள்ளமும் நிலத்தினும் பரந்தது. வானினும் உயர்ந்தது. கடலினும் ஆழமானது எனக் கூறலாம். பரந்த உள்ளத்தில் உலகப்பரப்பு முழுதும் பற்றிய சிந்தனை முகிழ்ப்பது இயல்பே யன்றோ?

'ஒரு மனிதன் தேவைக்கே இவ்வுலகம்' என்ற பொல்லாங்கு நீங்கி உலக மக்கள் ஒன்று எனும் எண்ணம் ஏற்பட்டு மனம் விரிவடையும் போது, தன்னலம் நீங்கிப் பொது நலம் ஓங்கும். நூலகத்திலுள்ள நூல்களெல்லாம் இத்தகைய உலகளாவிய நேயத்தை நமக்கு ஊட்டுவனவாக இருக்கவேண்டும் எனப் பாவேந்தர் விரும்புகிறார்.

"மனிதரெலாம் அன்பு நெறி காண்பதற்கும்
மனோபாவம் வானைப் போல் விரிவடைந்து
தனிமனித தத்துவமாம் இருளைப் போக்கிச்

சகமக்கள் ஒன்றென்ப துணர்வ தற்கும்
இனிதினிதாய் எழுந்த உயர் எண்ண மெல்லாம்
இலகுவது புலவர் தரு சுவடிச் சாலை.''

*சகமக்கள் ஒன்றென உணர்வதுதான் உயர் எண்ணம்.*

''உலகம் முழுவதும் — நோக்கின்
ஒருடம் பேயாம்
அலகில் சீவரெல்லாம் — அதன்
அவயவங்க ளேயாம்''

*என்பர் கவிமணி தேசிக விநாயகம். உலகம் உடம்பு. உலக மக்களோ அவ்வுடலின் உறுப்புகள். உறுப்புகள் ஒன்று பட்டால்தான் உடலியங்கும். அது போலவே உலக மக்களின் ஒன்றுபட்ட இயக்கமே உலக இயக்கமாகும்.*

*கடுகு உள்ளம், துவரையுள்ளம், தொன்னையுள்ளம், மாம்பிஞ்சுள்ளம், தாயுள்ளம் என உள்ளத்தில் பல படி நிலைகளைப் பாவேந்தர் காட்டுகிறார். சிறியது, பெரியது என்பதைக் குறிக்கப் பொருள்களைக் காட்டுவது தமிழ் மரபு. ''தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக் கொள்வர், பயன் தெரிவார்'' என்பது திருக்குறள். சிறியது, பெரியது என்பதைக் குறிக்கத் தினை, பனை இங்கே கூறப்பட்டுள்ளது. இம்முறையில்தான் பாவேந்தரும், சிறியது, பெரியதைக் குறிப்பிடக் கடுகு, துவரை போன்ற வற்றைக் காட்டுகிறார்.*

''தன்பெண்டு தன்பிள்ளை சோறு வீடு
சம்பாத்யம் இவையுண்டு தானுண் டென்போன்
சின்னதொரு கடுகு போல் உள்ளங் கொண்டோன்
தெருவார்க்கும் பயனற்ற சிறிய வீணன்!
கன்னலடா என் சிற்றூர் என்போன் உள்ளம்
கடுகுக்கு நேர்மூத்த துவரை உள்ளம்
தொன்னையுள்ளம் ஒன்றுண்டு தனது நாட்டுச்
சுதந்திரத்தால் பிறநாட்டைத் துன்பு றுத்தல்!
ஆயுதங்கள் பரிகரிப்பார்! அமைதி காப்பார்,

அவரவர் தம் வீடு நகர் நாடு காக்க
வாயடியும், கையடியும் வளரச் செய்வார்.
மாம்பிஞ்சு உள்ளத்தின் பயனும் கண்டோம்!
தூய உள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்
தொல்லுலக மக்களெலாம் 'ஒன்றே' என்னும்
தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்! ஆங்கே
சண்டையில்லை தன்னலந்தான் தீர்ந்த தாலே!

உலக மக்களெலாம் ஒருவரே எனும் எண்ணம் தாய்மை உள்ளத்தில்தான் தோன்றும் என்கிறார். தாயுள்ளம் தன்னலத்தைத் துறந்தது; ஆதலின் அதுவே அன்பு உள்ளம், பெரிய உள்ளமாகிறது.

தமிழ் இலக்கியங்கள் எல்லாமே உலக நோக்கத்தை உட்கொண்டவையே எனப் பாரதிதாசன் குறிப்பிடுகிறார். "வள்ளுவம் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு" என்றார் பாரதியார்; பாவேந்தர்,

முழங்கிடு கின்றதே அறம்
முட்டுப்படும் உலகே, இன வேற்றுமை
பட்டுக்கெடும் உலகே, நம் திருக்குறள் (முழங்)"

எனத் திருக்குறள் அறத்தை முழங்குவதாகக் கூறுகிறார். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து சிறக்கின்ற தெய்வ நிலையை அடைய வழிகாட்டும் திருக்குறளோ, 'மனத்துக் கண் மாசிலனாக வாழ்வதே அறம்' என்கிறது. மன மாசற்ற தன்மை மக்களிடையே நேரிடின் உலகம் ஒன்றெனும் எண்ணம் தழைப்பது உறுதியன்றோ? அதைத் தான் பாரதிதாசனும்,

"தூய எண்ணம்—மிகு
தூய எண்ணம்—இங்குத்

"தோன்றிடில் இன்பங்கள் தோன்றிடும் ஞாலத்தில்"
என்பார்.

*'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்த வற்றுளெல்லாம் தலை' என்கின்ற திருக்குறட் கருத்தை விடச் சிறந்த உலக சிந்தனை வேறென்ன இருக்கிறது! ஆகவே பாரதியார் கூறுகிறார்:*

வள்ளுவனார் இப்பெரிய வையத்தைக் காப்பதற்கோர்
தெள்ளுதமிழ்ப் பாட்டும் செப்பினர்—அஃது
பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை''

*திருவள்ளுவர் மட்டுமன்று; நம் புலவர்கள் அனைவரும் உலகப் பொன்னிலக்கியம் படைத்தவர்கள் தான்.*

தொடங்குக பணியைத் தொடங்குக அறத்தை
கடலிலும் வானிலும் கவினுறு நிலத்திலும்
வாழ்வுயிர் அனைத்தும் மக்கட் கூட்டமும்
வாழுமாறு - அன்புமணிக் குடையின் கீழ்
உலகினை ஆண்டார் உயர்வுற நம்மவர்.
புலவர்கள் 'உலகப் பொன்னிலக்கியம்'
ஆக்கினர்! மறவரோ அறிவு - அறியாமையைத்
தாக்குமாறு அமைதியைத் தாழாது காக்கக்
கண்கள் மூடாமல் எண்டிசை வைத்தும்
அறம்புரிந்து இன்ப அருவி ஆடினர்''

*இவ்வாறு பண்டையத் தமிழர்கள் உலக நலங்கருதி நாட்டை ஆண்டும், இலக்கியம் படைத்தும் வாழ்ந்தனர். தமிழே வையகம் உய்வதற்காக எழுந்த மொழிதான் எனப் பேசுகிறார் பாவேந்தர்.*

வையகமே உய்யு மாறு
வாய்த்த தமிழ் என் அரும் பேறு!''

*கவிஞர் பாரதிதாசன் இவ்வாறாக உலகை நினைந்து, உலக நேயம் வளர்வதற்காக, உலகளாவிய பார்வையுடன் பாடியுள்ள பாக்கள் பற்பலவாம்.*

# 19

# காலத்தை வென்ற கவிதை மறவன்

---

**இரா. முத்துக்குமாரசாமி**

- ☐ உலகம் எங்கணும் உள்ள தமிழ் ஆர்வம் கொண்டவர்களுக்கு எல்லாம் மறைமலையடிகளார் நூலகத்தின் வாயிலாகத் தமிழ் விருந்து அளித்துக் கொண்டு இருப்பவர் முத்துக்குமாரசாமி.
- ☐ உலகில் வெளிவந்திருக்கும் நூல்கள் அனைத்தையும் அறிந்த நூலகச் செல்வர்.
- ☐ மாபெரும் நிறுவனமான சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் ஆட்சியாளராகத் திகழ்பவர்.
- ☐ அன்புக்கு இலக்கணமானவர்.
- ☐ புத்தக உலகிலே வாழ்ந்து கொண்டிருப்பவர்.
- ☐ இந்த நூலுக்காகத் தனிக் கட்டுரை தந்துள்ளார்.

மாக்கவி, தேசியகவி, புதுமைக்கவி என்றெல்லாம் போற்றப்படுபவராக பாரதியார் வாழ்ந்த போதிலும், அவருடைய கவிதைகளைத் துருவி ஆராய்ந்தோர் அவரைப் பழைமையின் பாதுகாவலன் என்றே சொல்வர். அத்தகைய பழைமைப் பாதுகாவலரின் தாசனாக வாழ்ந்த நம் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனோ, பழைமையின் பகைவராகவும்; மூடநம்பிக்கைகள் என்னும் விலங்குகளைத் தகர்த்தெறிந்து, பழைமை என்னும் சிறையினின்று சிலிர்த்தெழுந்து அச் சிறைக் கதவுகளைப் பெயர்த்து வெளிக் கிளம்பும் சிங்கம் எனத் திகழ்ந்தார் எனில் மிகையன்று.

பாவேந்தர் தம்மைப் பாரதிக்குத் தாசன் என்று, அவர் மீது கொண்ட பற்றின் காரணமாகக் கூறிக்கொண்ட போதிலும், எல்லாத் துறைகளிலும் அவருக்குத் தாசராக இல்லாமல் தமக்கெனச் சில புதுப்பாதைகளை வகுத்துக் கொண்டார்.

இவர் உண்மையிலேயே பாரதிக்கு முழுத் தாசராக இருந்திருப்பின்; பாரதியின் சீடர்களும் பக்தர்களும் இன்றையத் தினம் பாவேந்தரின் தாசர்களாகி இவரைப் பெரும் புகழுக்கு ஆளாக்கியிருப்பர். இவரது நூற்றாண்டு விழாவும் ஓராண்டல்ல அதற்கு மேலும் நடந்திருக்கும். பாவேந்தரும் பகுத்தறிவுப் பகலவனாகத் திகழ்ந்திருப்பதற்குப் பதிலாக மூடநம்பிக்கைகளின் முழு உருவமாகத் திகழ்ந்திருப்பார். பாரதிக்கும் அவர்தம் தாசருக்குமிடையே காணப்பட்ட இந்த முரண்பாடுகள் சிந்திக்கத் தக்கவை.

''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'' என்று பாடிய பாரதியார் தாம் தொழிலாளர்க்குத் தெய்வ நம்பிக்கை தோன்றச் செய்யும் பாடல்களையும் பாடி வைத்தார். ஆனால் பாவேந்தரோ, கடவுள் பெயரைச் சொல்லித் தொழிலாளரை வருத்துவோரைப் பார்த்து 'காப்பார் கடவுள் உம்மைக் கட்டையில் நீர் போகு

மட்டும் வேர்ப்பீர் உழைப்பீர் என உரைக்கும் வீணர்'' என்று கூறி உழைப்பாளிகட்குக் கடவுள் நம்பிக்கையை விடத் தம் தோள்வலியில் நம்பிக்கை வேண்டும் என்று கூறினார். செய்யும் தொழிலே தெய்வம் என்பதே பாவேந்தரின் கோட்பாடு.

பாரதியார் சாதி வேற்றுமைகளையும் மூட நம்பிக்கைகளையும் சாடினார், என்று பலரும் கூறுவர், ஆனால் அவர் தம் பாடல்களை அலசி ஆராயின் சாதி மத பேதங்களை வேரறுக்க அவர் நினைத்தவர் அல்லர் என்பது புரியும். ஆனால் நம் பாவேந்தரோ,

**''இருட்டறையில் உள்ளதடா உலகம்**
**சாதி இருக்கின் றதென்பானும் இருக்கின்றானே**
**மருட்டுகின்ற மதத்த லைவர் வாழ்கின்றாரே!''**

என்று பாடி பாரதியாரையும் விஞ்சுகின்றார்.

பார்ரதியார் தமிழைப் போற்றினார். தமிழைப்போல் இனிதான மொழியை வேறெங்கும் காணோம் என்றார். அதே நேரத்தில் இந்நாட்டை ''ஆரிய பூமி'' என்றார். ஆனால் நம் பாவேந்தரோ,

**''தமிழுக்கு அமுதென்று பேர்! தமிழ்எங்கள்**
**உயிருக்குநேர்!''** என்றும்,
**''எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்**
**மங்காத தமிழென்று சங்கே முழங்கு''** என்றும்,

**''தமிழைப் பழித்தவனைத் தாய் தடுத்தாலும் விடேன்''**

என்றும் முழங்கினார்.

தேசியகவி என்று புகழ்ப்பெற்ற பாரதியாருக்கு நம் பாவேந்தர் பாரதிதாசனைத் தவிர வேறு சீடர்கள் கிடைத்தபாடில்லை. ஆனால், இன்று பாரதிதாசருக்குப் பின்னர் பாரதிதாசன் பரம்பரை என்று சொல்லுமளவுக்கு ஒரு பரம்பரையே வளர்ந்து வருகிறது. இது பாவேந்தர்

என்னும் கவிதை மறவருக்குக் கிடைத்திருக்கும் பெரும் பேறு மட்டுமன்று. ஒரு பெரும் பாசறையே ஆகுமன்றோ!

கால வெள்ளத்தில் எத்துணைப் பெரிய கவிஞர்கள் மறைந்தபோதிலும் கவிதை மறவர் பாவேந்தர் மட்டும் என்றும் மறையவே மாட்டார். அவர் எண்ணங்கள் கருத்துக்கள் கொள்கைகள் புதுமைக்குப் புதுமையாகவும் கால வெள்ளத்தில் எதிர் நீச்சல் போடும் ஈடற்ற கவிதை களாகவும் திகழும் என்பதில் ஐயமில்லை.

பாவேந்தர் பரம்பரை வளரும் பரம்பரை. அவர் விட்டுச் சென்றுள்ள நாட்டுப் பற்று, மொழிப்பற்று, இனப் பற்ற ஆகிய ஒப்பற்ற முப்பற்றுகளும் என்றும் நிலைத் திருப்பவை.

# 20

# புரட்சிக் கருத்தா? தமிழ்ப் பற்று?

திரீயெம் அப்துல் ரஹ்மான்

- அப்துல் ரஹ்மான் உயர்ந்த குடும்பத்திலே பிறந்தவர்.
- திறமையும், பெருமையும் மிக்க சகோதரர்களைப் பெற்றவர்.
- அவருடைய தோற்றம், பேச்சு, எழுத்து, செயல் அனைத்திலும் ஒரு மிடுக்கு உண்டு.
- ஆற்றல் வாய்ந்த தொழில் பிரமுகர். அயல்நாடு சென்று வந்தவர்.
- 'கதைக் களஞ்சியம்' என்ற வரிசையில் பல நூல்கள் எழுதியுள்ளார்.
- அவருடைய இளம் பருவத்துப் பட்டிமன்றப் பேச்சைச் சுருக்கி இங்கே தரப்பட்டுள்ளது.

அதிராம்பட்டினம் உயர்நிலைப் பள்ளியில், 1966-ஆம் ஆண்டு நான் 9-ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன்-

அப்பொழுது தமிழ் இலக்கிய மன்றத்தின் சார்பாக பட்டி மன்றம் நடைபெற்றது.

பட்டி மன்றத்தின் பொருள்: புரட்சிக் கவிஞர் பாரதி தாசன் கவிதைகளில் நிறைந்திருப்பது புரட்சிக் கருத்தா? தமிழ்ப் பற்றா? என்பதாகும்.

அதில் நானும் கலந்து கொண்டேன். அதுவே என் முதல் பேச்சு!

என்னைக் கவர்ந்த பாடல்களிலிருந்து சில வரிகளைக் குறித்து வைத்துக் கொண்டேன்! பேச்சைத் தொடங் கினேன்:

"பாரதிதாசனுக்குத் தமிழ்ப் பற்று இருந்ததாலே மகா கவி பாரதிக்குத் தாசன் ஆனார். அதனால் தான் அவர் கவிஞ ராக ஆனார். அதைக் கொண்டே அவர் கவிதை எழுதினார். கவிதைகளில் புரட்சிக் கருத்துக்கள் பெருக்கெடுத்தன. "புரட்சிக் கவிஞர்" என்ற பட்டமும் சூட்டப் பெற்றது.

இப்பொழுது, "அவர் கவிதையில் புரட்சிக் கருத்தா? தமிழ்ப் பற்றா? என்று ஏன் கேட்க வேண்டும்? இதற்கு ஒரு பட்டி மன்றமா? இதற்கு ஒரு தலைவரா?"

நான் இவ்வாறு கூறியதும், அவையோர் ஆர்வத்தோடு மேற்கொண்டு என்ன? என ஆவலோடு என்னை நோக்கினர். தலைவரும் வியப்போடு என்னைக் கவனிக்கலானார்.

"தமிழின் சிறப்பை, மேன்மையை, உயர்வை, இனிமையை, எத்தனையோ காலமாக, எவ்வளவோ அறிஞர்கள் போற்றிப் புகழ்ந்து கொண்டாடியுள்ளனர்.

ஆனால், பாரதிதாசனின் புரட்சிக் கருத்துக்களுக்கு எளிமை மிக்க இனிய தமிழ் மெருகேற்றி துணை புரிந்தது.

இதர எந்தக் கவிஞரும் கூறத் துணியாத புரட்சிக் கருத்துக்களை பாரதிதாசன் துணிந்து கூறினார். பட்டம், பதவி, பாராட்டு, பொன்னாடை எதையும் அவர் எதிர் பார்த்தவர் அல்லர்.

*வழக்கமான பாதையிலிருந்து விலகி, அவர் புதிய பாதையில் சென்று முன்னேறினர். அதுவே புரட்சிக் கவிதை! புரட்சிக் கருத்துக்கள்!*

*ஒரு முறை படித்தால் அப்படியே மனதில் படிந்து விடும்.*

**''வாழ்கின்றார் முப்பத்து முக்கோடி என்றால்**
**சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகையிருக்கும்.**

........................

**பேதம் வளர்க்கப் பெரும் பெரும் புராணங்கள்!**
**சாதிச் சண்டை வளர்க்கத் தக்க இதிகாசங்கள்!**

*இவ்வாறு உண்மை நிலையைக் கூறுகிறார் பாரதிதாசன்*

*மூடப்பழக்க வழக்கங்களை அவர் கண்டித்து பாடியதைப் போல் வேறு எந்தக் கவிஞர் பாடினர்?*

**மூடப்பழக்கம் முடிவற்ற கண்ணுறக்கம்**
**ஓடுவதென்றோ? உயர்வதென்றோ? நானறியேன்**

*கவிஞர்கள் எதிலும் அழகு காண்பார்கள் தாம் கண்டவற்றைப் பாடுவது இயல்பு. ஆனால், பாரதிதாசனோ அழகை மட்டும் காணாமல், அங்கே அவருக்கே உரிய புரட்சிக் கருத்தைச் சீர்திருத்தப் பிரச்சாரத்தைக் கூறத் தயங்க மாட்டார்.*

*'புறாவை'ப் பாடும் பாரதிதாசன் என்ன கூறுகிறார் பாருங்கள்:'*

**வட்டமாய்ப் புறாக்கள் கூடி**
**இரையுண்ணும்; அவற்றின் வாழ்வில்**
**வெட்டில்லை; குத்துமில்லை;**
**வேறு வேறிருந் தருந்தும்**
**கட்டில்லை; கீழ்மேல் என்னும்**
**கண் மூடி வழக்கமில்லை**

*'புரட்சிக்கவி' என்ற சிறு காப்பியத்திலே, அமுதவல்லி கூறும் சொற்கள் நாட்டின் உண்மை நிலையை சித்திரித்துக் காட்டுகின்றது. அதாவது உயர் சாதிக்காரர், பணக்காரர்*

என்ற பாகுபாடு நம்மை மிரட்டுகின்றது அல்லவா? அதை எப்படிக் கண்டிக்கிறார் பாருங்கள்.

சாதி உயர் வென்றும், தனத்தால் உயர் வென்றும்,
போதாக் குறைக்கும் பொதுத் தொழிலாளர் சமூகம்
மெத்த இழிவென்றும், மிகு பெரும் பாலோரை எல்லாம்
கத்தி முனைக் காட்டிக் காலமெல்லாம் ஏய்த்து வரும்
பாவி களைத் திருத்தப் பாவலேனே நம் மிருவர்
ஆவி களையேனும் அர்ப்பணம் செய்வோம்!

காதல் கவிதைகளிலும் காதல் சுவை கனியப் பாடுவதோடு சீர்திருத்தமான புரட்சி வித்துகளை ஊன்றுகின்றார்.

ஒட்டும் இரண்டுள்ளத்தை தம்மில்
ஓங்கிய காதலனைப்
பிட்டுப் பிட்டுப் புகன்றார் அதைப்
பெற்றவர் கேட்கவில்லை.
குட்டை மனத்தாலே—அதை
கோபப் பெருக்காலே
வெட்டிப் பிரிக்க வந்தார்—அந்த
வீணையை நாதத்தினை!

உண்மைக் காதலுக்குத் தடை ஏற்படுமானால், அந்தத் தோல்வி யாருக்கு? உலகத்துக்குத்தான் அது தோல்வி என்று கூறுகிறார்.

இன்று தொட்டுப் புவியே—இரண்
டெண்ணம் ஒருமித்த பின்
நின்று தடை புரிந்தால்—நீ
நிச்சயம் தோல்வி கொள்வாய்!

இவ்வாறு பாரதிதாசன் தம்முடைய புரட்சிக் கருத்துக்களை ஒவ்வொரு துறையிலும் விதைத்திருக்கிறார்.

தொழிலாளர் நலன், கைம்மைக் கொடுமை மூடத் திருமணம், தமிழ்ப்பேறு, தமிழ் வளர்ச்சி இப்படி அவருடைய கவிதை உலகில், புரட்சிக் கொடி வானளாவிப் பறக்கின்ற சிறப்பைக் கண்டு களிக்கின்றேன்.

# 21

# சிறுத்தைப் புலியே வெளியில் வா

**கவிஞர் நாரா. நாச்சியப்பன்**

- பாரதிதாசன் பரம்பரையிலே முன்னணியில் இருப்பவர்.
- அடக்கமும் அமைதியும் அவருடைய தனிப்பண்பு.
- கவிதையிலே கனல் பறக்கும். கொள்கையிலே உறுதி மிக்கவர்.
- கொள்கைக்காக 'இளந்தமிழன்' என்னும் இதழ் வெளியிட்டவர்.
- நாச்சியப்பன் கவிதைகள் - இரண்டாம் பகுதியிலிருந்து இக் கவிதை, வெளியிடப் பெறுகிறது.

வண்ண எழிலும் வழவழப்பும் கொண்டதுவாய்
கண்ணுக் கழகாய்க் கலேப்படைப்பாய் ஓர் அழைப்பை

கோத்துப் படியெடுத்துக் கூர்மையுடன் வாசித்துப்
பார்த்துத் திருத்திப் பதிப்பித்த பின்னாலே

பச்சைக் குழந்தை பழபழக்கும் தேன்முகத்தில்
மச்சமிட்டு வைத்து மருவாக்கும் தன்மையென

அச்சுப் பிழைதோன்றி நம்மை அசடாக்கிக்
கொச்சைச் சிரிப்பால் குறும்பு முகங்காட்டும்

காலேமணி பத்து கருத்தூன்றிப் பார்த்ததுதான்
கோலக் கலேமணிபத் தாய்க்குறுகிக் காட்சிதரும்

மூன்று முறைவாங்கி முப்பத்து மூன்றுமுறை
தானே படித்துத் தலேப்பில் அடிப்பாணைக்

கையெழுத்துப் போட்டவரே காட்ட முகத்தோடு
ஐயா பிழையாய் அடித்தீர் எனக் குதிப்பார்.

வாளின்றி வேலின்றி வாழ்க்கைக் களத்தினிலே
நாளும் பிழைகள் அறப்போர் நடத்திவரும்

அச்சகத்தான் என்னே அழைத்துக் கவியரங்கம்
இச்சகத்தில் சற்றே இணைந்திடலாம் வாவென்றார்

எழுத்திற் சுவைகூட்டும் ஏந்தலினேப் பாடுதற்கே
எழுத்திற் பொருள் கூட்டும் எம்தோழா வாவென்றார்

மூடத் தனத்தைத் தீதென்றால் முட்டவரும்
மாடுகளேச் சீர்திருத்தி வண்டியிலே பூட்ட வந்த

ஈடற்ற தோளானே என்னுசான் பாவேந்தைப்
பாடற்றேர் ஏற்றிப் பவனிவரச் செய்கின்ற

இந்த அரங்கில் எனக்குமொரு பங்களிக்கச்
சிந்தை கொண்ட அன்பர்க்கு நன்றி செலுத்துகின்றேன்

என்ன தலைப்பில் யான்பாட வேண்டுமெனில்
சின்னஞ் சிறுவர்க்குத் தேன்தமிழில் தந்த

இளைஞர் இலக்கியத்தை ஏற்றிடுக என்று
தலைவர் மொழிகின்றார்; சிந்தித்தித் தான் பார்த்தேன்

கோலக் குயில்போலக் கூவிப் பறந்துவிட்ட
ஞாலத்துக் காசானை நானினைந்து பார்க்கின்றேன்

நாடி துடிக்க நரம்பு முறுக்கேறப்
பாடியநூல் அத்தனையும் பாரில் இளைஞர்க்கே

பாரடா வையப் பரப்பை எனும்வரி
யாரை அழைப்பதோ? அயராப் பணிக்குச்

சிறுத்தைப் புலியே வெளியில்வா வென்ற
உரத்த குரலினை முழக்கம் எவருக்கோ?

கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால்
மண்ணில் குமரருக்கு மாமலையும் ஓர்கடுகாம்

காதலையும் காதலினால் ஆற்றலுறும் கட்டிளைஞர்
சாதலையும் எண்ணிச் சலியாத போர்க்குணத்தார்

தம்மை யழைத்துத் தமக்குள்ள வேதனையைச்
செம்மையுறச் சொல்லும் சிலவரிகள் கேட்டிடுவீர்!

இருட்டறையில் உள்ளதடா உலகம் சாதி
இருக்கின்ற தென்பானும் இருக்கின் றானே
மருட்டுகின்ற மதத்தலைவர் வாழ்கின் றாரே
வாயடியும் கையடியும் மறைவ தெந்நாள்?

இப்படியெல்லாம் இளைஞரைக் கூவியே
தப்படி வைத்தல் தடுக்கும்பா வேந்தர்தாம்

சூதாடித் தோற்றகதை சோதரரை மாய்த்த கதை
நீராடும் பெண்கள்துகில் நீக்கும் சிறுகதைகள்

நாட்டுச் சிறுவர்க்கு நச்செண்ணம் சேர்க்குமென
வாட்ட முற்று நல்ல வழிகாட்ட எண்ணி

இளைஞர் இலக்கியத்தை ஏட்டில் எழுதி
எளிமைக் இலக்கியம் ஈதெனக் காட்டினர்.

செந்தமிழ் நாட்டுச் சிறுமி படித்தேனும்
செந்தமிழ் தன்னைப் படித்தேன், எனுமொழியும்

சிங்கப் பிடரைச் சிலிர்த்து: விடுதல் போல்
தங்கக் கதிரவன் வருதலைச் சாற்றலும்

கண்ணீர்க் குளத்தினைப் பாடிச் சிறுவர்க்கு
வண்ணத் தமிழை வழங்கும் சிறப்பையும்

குருமார் கொடுமைக் கொதிப்பை மறந்து
பெருமாள் மாட்டினைப் பாடிச் சிறுவர்தம்

அன்புக் குரியதாய் ஆகிய பாவேந்தர்
இன்னும் தூக்கமா பாப்பா எழுகெனக்

கூவி யழைத்துக் குயிலும் மயிலும்
தாவித் திரியும் குரங்கும் குதிரையும்

யானையும் பாம்பும் அணிலும் குருவியும்
தேனெனச் செந்தமிழ்ப் பாட்டில் வடித்திங்கு

நாட்டுச் சிறுவரை நல்ல குடிகளாய்
மாற்றும் பொறுப்பை மகிழ்ந்தேற்றார் கண்டீரே.

பாவேந்தர் எண்ணம் பலிக்கத் தொடர்ந்திங்கே
நாமேந்து வோம் நற் பணி.